விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in SriLanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆனி 30 திங்கட்கிழமை (14.07.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 207

# தேர்தல் தேவைகளுக்காகவே ஆளுநருக்கு மீள் நியமனம்!

## ஜனாதிபதியைச் சாடுகிறார் முதலமைச்சர்

*அதிகாரத்தைப் பகிரும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை. மூன்றாவது தடவையாகவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள அவர் தனது தேர்தல் தேவைகளுக்காகவே ஆளுநராக சந்திர சிறியை மீண்டும் நியமித்துள்ளார் என என வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.*

இலங்கையின் வடக்கு மாகாணத்தின் ஆளுநராக மீண்டும் முன்னாள் இராணுவ அதிகாரி ஜி.ஏ.சந்திர சிறியை நியமித்துள்ளதன் மூலம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனநாயக நடைமுறைகளை மீறிச் செயற்பட்டுள்ளதாக மாகாண முதலமைச்சர் கூறியுள்ளார்.

வடக்கு மக்களின் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி முன்னிலையில் தாம் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட போது, சிவில் பின்புலம் கொண்ட ஆளுநர் ஒருவரை நியமிப்பதாக ஜனாதிபதி உறுதியளித்திருந்ததாக விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

ஆனால் தற்போது அந்த உறுதிமொழியை மீறியதன் மூலம் ஜனாதிபதி தனது பதவிக்கு இழுக்கை ஏற படுத்தியிருப்பதாகவும் முதலமைச்சர் கூறினார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களை இராணுவத்தின் கட்டுப்பாட்டில் வைத்திருந்து, முழு நாட்டையுமே தமது அதிகாரத்தின் பிடியில் வைத்திருக்க வேண்டும் என்ற அரசியல் நோக்கத்துடன் ஜனாதிபதி செயற்பட்டு வருவதையே வடமாகாண ஆளுநரின் மீள் நியமனம் காட்டுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

"அதிகாரத்தை பகிரவேண்டும் என்ற எண்ணம் ஜனாதிபதியிடம் இருப்பதாக நான் காணவில்லை என்றும், மூன்றாவது தடவையாக ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள மகிந்த ராஜபக்ஷ, வடக்கு மாகாணத்தில் தனது தேர்தல் தேவைகளுக்காகவே ஆளுநர் சந்திர சிறியை தொடர்ந்தும் வைத்திருக்க விரும்புவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார். (எ-6)

## புலிகள் விட்டுச் சென்ற இடத்திலிருந்தே பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்!

### பேராசிரியர் சிற்றம்பலம் தெரிவிப்பு

(கொழும்பு)

பேச்சுவார்த்தைகள் இனி ஆரம்பிக்கப்பட்டால் நிச்சயமாக நாங்கள் விடுதலைப்புலிகள் விட்டுச் சென்ற இடத்திலிருந்துதான் பேச வேண்டும் என தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும் பேராசிரியருமான சி.க.சிற்றம்பலம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகமுமாக விளங்கிய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கத்தின் நினைவு நாள் நேற்றுக்காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் 30 மாட்டின் வீதியிலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களுக்கு பூரணமான விடிவைத்தரக்கூடியது மாவட்ட மட்டத்திலான அதிகாரப் பகிர்வே. முழுமையாக நிர்வாகத்தை நடத்துகின்ற முறை. இந்த முறை சுவிஸ் நாட்டிலேயிருக்கின்றது. இது தொடர பாக தமிழரசுக்கட்சி மாநாடுகளில் எல்லாம் தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்தது. சுவிஸில் 24 மாவட்டங்கள் இருக்கின்றன. இங்கு 25 மாவட்டங்கள் இருக்கின்றன. எனவே இலங்கையின் சரி அரைவாசி சுவிஸ்லாந்து அரைவாசியிலேயே சுயாட்சி நடக்கின்றது. மத்தியில் முறையான அதிகாரப்பகிர்வு அங்கு இருக்கின்றது. சுழற்சி முறையிலே அதிகாரம் பகிரப்படுகின்றது. பெரும்பான்மைச்சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தான் தலைவராகயிருக்க வேண்டுமென்றில்லை. சிறுபான்மை இனத்தவர்களும் தலைவராக வருவதற்குரிய முழுமையான அதிகாரம் அங்குள்ளது.

அதற்கு அப்பால் எங்களுடைய கட்சி தமிழ்பேசும் மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்ட ஸ்தாபனம். தமிழ் பேசும் மக்கள் என்று சொல்லும் போது நாங்கள் வடக்கு கிழக்கினை மட்டும் பார்க்ககூடாது. வடக்கு கிழக்கிற்கு அப்பாலும் 50 வீதமான தமிழர்கள் உள்ளனர். அவர்களுடைய நலன்களையும் நாம் மனதிலே கொள்ள வேண்டும். அத்தோடு மலையகத்

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஆயுதக்குழுக்களின் முறியடிப்பு குறித்து இலங்கையிடம் கற்க பாக்.விருப்பம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தானில் முஸ்லிம் ஆயுத குழுக்களை முறியடிப்பது தொடர்பில இலங்கையிடம் அனுபவங்களை கற்றுக்கொள்ள வேண்டும் என பாகிஸ்தான் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை பெற்ற வெற்றி குறித்து கற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பொலிஸ் அதிகாரியான மொஹமட் அலி பாபாகேயில் பாகிஸ்தான் ஆங்கில பத்திரிகை ஒன்றிடம் கூறியுள்ளார்.

இலங்கையின் மூலோபாய இராணுவ பலம் மற்றும் மக்கள் ஆதரவுடன் நாட்டுக்கு எதிரான எதிர்ப்பாளர்களை தோற்கடிக்க முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

படையினரை பயன்படுத்திய பினனர், சமாதானத்தை தக்க வைத்து சரணடைந்தவர்கள் ஒருங்கிணைக்கும் சிவில் நிர்வாக திறனிலேயே உண்மையான சவால் உள்ளது.

இலங்கையின் மாதிரியை முற்றாக பயன்படுத்த முடியாது. குறைந்த

19 ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கையிடம் அனுமதி கோரினார் ஐ.நாவின் சிறப்பு அறிக்கையாளர்

(கொழும்பு)

ஐ.நாவின் நீதிக்குப் புறம்பான படுகொலைகள் மற்றும் தன்னிச்சையான மரணதண்டனைகள் தொடர்பான சிறப்பு அறிக்கையாளர் கிறிஸ்ரொப் ஹெய்ன்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்ய நுழைவு அனுமதி கோரியுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் கடந்த ஆண்டும் இலங்கைக்கு பயணம் செய்ய முயன்ற போதிலும், அந்த முயற்சி பயனளிக்க



வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளுக்கு நேரில் விஜயம் செய்வதற்கு தமக்கு அனுமதி தருமாறு கோரி தாம் விடுத்துள்ள வேண்டு கோளை

20 ஆம் பக்கம் பார்க்க....

## காணி அளக்கும் பணி மீண்டும் இன்று?

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கில் கடற்படையினரால் மூன்றாவது முறையாகவும் இன்று காணிஅளவிடும் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதற்கென கொழும்பிலிருந்து நிளஅளவைத்திணைக்கள அதிகாரிகள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

யாழ்.கீரிமலை பகுதியில் கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் காணி சுவீகரிக்கும் நடவடிக்கைக்கு அமைவாக கடந்த 7 ஆம்

19 ஆம் பக்கம் பார்க்க....

## சம்பந்தனின் கொழும்பு வீட்டில் நுளம்பைத் தேடிய படையினர்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனின் கொழும்பு வீட்டில் படையினர் சோதனையிட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

1976ஆம் ஆண்டு அணிசேரா நாட்டுக்காக கட்டப்பட்ட தொடர் மாடியின் இரண்டாவது தளத்தில் அமைந்துள்ள வீட்டில் சம்பந்தன் கூட்டம் ஒன்றை நடத்திக் கொண்டிருந்த போதே இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது சம்பந்தனின் வீட்டுக் கதவு தட்டப்பட்ட போதிலும், கூட்டத்தில் அவர்கள் கவனம் செலுத்தியிருந்ததால் கதவு திறக்கப்படவில்லை.

இந்நிலையில் சம்பந்தனின் வீட்டுக் கதவு மீண்டும், மீண்டும் தட்டப்பட்டதை அடுத்து, உதவியாளர ஒருவர் சென்று கதவைத் திறந்தார்.

இதன்போது சம்பந்தன் முன்வந்து நின்று மரியாதை செய்த படைத்தரப்பின் இளம் அதிகாரி ஒருவர், தாம் டெங்கு நுளம்புகளைக் கண்டுபிடிக்கும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், அதனால் வீட்டை சோதனையிட வேண்டும் என்றும் கூறினார். இதற்கு சம்பந்தனும் இணக்கம் தெரிவித்தார்.

20 ஆம் பக்கம் பார்க்க....

## 2022 ஆம் ஆண்டுவரை இலங்கையில் மகிந்த ஆட்சி

### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்த உடன் மக்களிடம் சென்று 2022-ம் ஆண்டு வரை நாட்டை எழுதி எடுத்து கொள்ளுங்கள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே 2022 -ம் ஆண்டு இந்த நாட்டின் ஜனாதிபதி என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

கண்டி கட்டுகஸ்தோட்டையில் உரையாற்றிய அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கு பின்னர், ஜனாதிபதித் தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஊவா மாகாண சபை கலைக்கப்பட்டு தேர்தல் நடத்திய பின்னர், எந்த தேர்தலையாவது நடத்துமாறு நாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் முடிவடைந்த உடன் மக்களிடம் சென்று 2022-ம் ஆண்டு வரை நாட்டை எழுதி எடுத்து கொள்ளுங்கள். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே 2022 -ம் ஆண்டு வரை இந்த நாட்டின் ஜனாதிபதி எனவும் ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

20 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மோடி அரசின் அழைப்பை ஏற்று இந்தியா செல்கிறது கூட்டமைப்பு

## இம்மாத இறுதியில் பயணம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்தியாவுக்கான விஜயம் இம்மாத இறுதி வாரத்தில் நடைபெறும் என கூட்டமைப்பு வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியாவின் புதிய அரசாங்கமான மோடி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சியுடன் சந்திப்புக்களை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஒன்றை வழங்குமாறு, கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், மோடிக்கு அனுப்பி வைத்த வாழ்த்துக் கடிதத்தில் விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறப் போவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ளபோது, இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கான தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் விஜயம் இம்மாத இறுதிக்குள் இடம்பெறுமென நாம் நம்புகின்றோம்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதற்கு இந்தியா இந்தப் பிராந்தியத்தில் முக்கியமான பலம்வாய்ந்த நாடாக இருக்கின்றது. அத்துடன் தென்னாபிரிக்கா கூட இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பை விரும்புகின்றது.

ஆகவே வடகிழக்கின் உடனடிப் பிரச்சினைகளான இராணுவத்தின் ஆக்கிரமிப்பு, நில ஆக்கிரமிப்பு, இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் இருக்கும் முட்டுக்கட்டைகள் தொடர்பில் இந்தியாவின் புதிய அரசாங்கத்திடம் எடுத்து விளக்க வேண்டிய தேவை எமக்கு எழுந்திருக்கின்றது.

இவ்விடயங்கள் தொடர்பாகவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்த இருக்கின்றோம்.

புதிய அரசாங்கம் என்பதால் அவர்களுக்கு எங்களுடைய நியாயப்பாட்டையும் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக தொடரும் அநியாயங்களை எடுத்துக் கூறவேண்டிய தொரு கடமை கூட்டமைப்புக்கு இருக்கின்றது.

அதேவேளை தொடர்ச்சியாக இந்தியாவுடன் பேச்சுக்களை நடத்தவும் அவர்களுடன் இணைந்து பணியாற்றவும் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது என மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இதேவேளை வடமாகாண ஆளுநராக மீண்டும் ஓய்வுபெற்ற இராணுவத் தளபதி ஜி.ஏ.சந்திரசிறி நியமிக்கப்பட்டிருப்பது தொடர்பில் கூட்டமைப்பினரும், வடமாகாண மக்களும் அதிருப்தியடைந்திருக்கும் சூழ்நிலையில் இவ்விவகாரமும் இந்திய விஜயத்தின் போது பேசப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த நிலையிலேயே கூட்டமைப்பினரின் விஜயம் தொடர்பிலான விடயம் வெளிவந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (எ-6)

# உல்லாசப் பயணி மீது பாலியல் வல்லுறவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - பாசிக்குடா உல்லாசபுரியில ரஷ்ய நாட்டு உல்லாச பயணி ஒருவரை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்த முயன்ற குற்றச்சாட்டில் வாழைச்சேனை பேத்தாழையைச் சேர்ந்த 33 வயது நபர் ஒருவரை தாம் கைது செய்துள்ளதாக கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

பாசிக்குடா கடலோரப் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை உல்லாசமாக இருந்த தன்னை குறித்த நபர் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றார் என்று கடற்கரையில் காவல் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர்களிடம் ரஷ்யப் பெண் முறையிட்டுள்ளார்.

இதையடுத்தே தாம் சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர் என்றும் அவரை வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-6)


## காணி விற்பனைக்கு

உடையார்கட்டு சந்தைக்கு பின்புறமாக 1 1/2 ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட வயல் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0774000034

(C-7934)


# நம்பிக்கையுடன் வந்த ரமபோஷா ஏமாற்றத்துடன் நாடு திரும்பினார்

## அரசியல் நோக்கர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கைக்கு கடந்த வாரம் விஜயம் செய்திருந்த தென்னாபிரிக்க உப ஜனாதிபதி சிறில ரமபோஷா ஏமாற்றத்துடன் நாடு திரும்பியதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில்அரசாங்கத்துக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான் பேச்சுக்கு அனுசரணை வழங்கும் வகையில் தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா விசேட தூதுவராக சிறில் ரமபோஷாவை நியமித்திருந்தார்.

அவ்வகையில் அமைதி மற்றும் நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுப்பதற்காக இரண்டு நாள் உத்தியோகபூவ் பயணத்தை மேற்கொண்டு சிறில் ரமபோஷா கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

பெரும் எதிர்பார்ப்புடனும், முழு நம்பிக்கையுடனும் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சிறில் ரமபோஷா, அரசாங்கத் தரப்பு மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுகளின் பின்னர், ஏமாற்றத்துடன் தென்னாபிரிக்கா திரும்பியதாக அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் நடத்திய நீண்ட பேச்சின் போது, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நேரடிப் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று சிறில் ரமபோஷா வலியுறுத்தியிருந்தார்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கேற்க வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இந்நிலையில் அலரி மாளிகையில் இருந்து துயரத்தை வெளிப்படுத்தியவாறு சிறில் ரமபோஷா வெளியேறினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

# வத்திக்கான் பிரதிநிதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்



வத்திக்கானின் இலங்கைக்கான பிரதிநிதி றூள் சோ நேற்று யாழிற்கு விஜயம் மேற்கொண்டார்.

நேற்றுக் காலை யாழ். வருகை தந்த அவர யாழ். புனித செபஸ்தியார் தேவாலயத்தில் விசேட திருப்பலி பூசையை நடத்தினார்.

யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகத்துடன் இணைந்து இந்த பூசையை நடத்தினார். எனினும் அவரது இலங்கை வருகைக்கான முழுமையான காரணம் தெரிவிக்கப்படவில்லை.

பாப்பரசர் வருகையை முன்னிட்டு, அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் நோக்கில் அவரது பயணம் அமைந்திருக்கலாம் என உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-6)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தேவராஜா திருமுருகராஜன் J.P (திருமுருகன்)

எமது அரசறிவியல் பாட விரிவுரையாளர் தேவராஜா திருமுருகராஜன் J.P (திருமுருகன்) ஆசிரியர் யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அவர்கள் கடந்த 17.06.2014 யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி A.A.ஆனந்தராஜா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவரின் கல்விப்பணி மற்றும் சமூகப்பணி என்றென்றும் தொடர இறையாசி வேண்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்.பேராதனை வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்கள், யா/பட்டப்படிப்புகள் கல்லூரி - யாழ்ப்பாணம், ஐடியல் கல்லூரி - மானிப்பாய்.

(7016)


# மட்டக்குளியில் இருவர் கொலை

மட்டக்குளி பகுதியில் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு சம்பவங்களில் பெண்ணொருவர் உட்பட இருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்குளி சாந்திபுர பகுதியிலுள்ள வீடொன்றில், பெண்ணொருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச்சம்பவம நேற்று முன்தினம் அதிகாலை 4.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, மோதரை பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

மோதரையில் இடம்பெற்ற சம்பவத்தில் 43 வயதான நபரொருவர் பலியாகியுள்ளார். [illegible] பட்டுள்ளார். (எ-6)


## வாழ்த்தி வரவேற்கின்றோம்



திருமதி உதயராணி முனீஸ்வரன்

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்று கடமை புரியும் திருமதி உதயராணி முனீஸ்வரன் அவர்களை வருக வருகவென வாழ்த்தி வரவேற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம், மு/விசுவமடு மகா வித்தியாலயம்.

(7006)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எயிட்ஸ் தாக்கத்துக்குள்ளான 72 குழந்தைகள் பிரசவிப்பு

கடந்த பதின்மூன்று வருட காலப் பகுதி யில் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளான தாய்மார்கள் மூலமாக அந்நோய்த் தாக்கத்துக்குள்ளான எழுபத்திரெண்டு குழந்தைகள் பிறந்துள்ளதாக தேசிய பாலியல் நோய்கள் தடுப்பு மற்றும் எயிட்ஸ் தடுப்பு பிரிவின் விஷேட வைத்திய நிபுணர் சிசிர லியனகே தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையான காலப்பகுதியில் பிறந்த அவ்வாறான குழந்தைகளில் நூற்றுக்கு நாற்பது வீதமானோர் உயிரிழந்துள்ளனர். அதே போல சென்ற வருடம் எயிட்ஸ் நோய்த் தொற்றுக்குள்ளான தாய்மார்களிடமிருந்து பன்னிரெண்டு குழந்தைகள் பிறந்துள்ளனர்.

மகப் பேற்றின் போது தாய்மாரின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு பரிசோத னைகள் செய்யப்பட வேண்டும்.

எனவே, மேல் மற்றும் தென் மாகாணங்களில் இதுவரை குழந்தைகளை பிரசவிக்கும் தாய்மார்களிடமிருந்து இரத்த மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. 2015 ஆம் ஆண்டளவில் நாடளாவிய ரீதியில் பிரசவத்தின் போது தாய்மார்களின இரத்த மாதிரிகளைப் பெற்று பரிசோதனைகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும். குறிப்பாக அச்செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் போது தாய்மாரின் விருப்பத்தை அறிதல் இன்றியமையாததாகும்.

எனவே, தாய்மார்களின் விருப்பத்தை அறிந்த பின்னரே இரத்த மாதிரிப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (அ)

# அமைச்சர்களின் குற்றச்சாட்டுக்களை நிராகரித்தது அமெரிக்க தூதரகம்

(கொழும்பு)

இலங்கையின் பல அமைச்சர்கள் சுமத்தும் குற்றச்சாட்டுக்களை அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளது.

இலங்கையில் இளைஞர்கள் மத்தியில் சமூக ஊடகப் பயிற்சிகளை அமெரிக்கத் தூதரகம் வழங்கி வருகின்றமை தொடர்பில் அரசாங்க அமைச்சர்கள் அமெரிக்கத் தூதரகம் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி வருகின்றனர்.

இது அரசியல் நோக்கம் கருதிய செயற்பாடு என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதற்கு பதிலளித்துள்ள அமெரிக்க தூதரக பேச்சாளர் தமது தூதரகம் மேற்கொண்டு வரும் பயிற்சிகள் அரசியல் நோக்கற்றவை என்று தெரிவித்துள்ளார்.

தமது தூதரகத்தை பொறுத்தவரை பேஸ்புக், யூடியுப், இன்ஸ்டாகிராம் ஆகியவை தொடாபிலான தொழில்நுட்ப விடயங்களையே போதிப்பதாக பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இது நீண்டகால சுதந்திர ஊடகத் துறைக்கான பயிற்சிகளே என்றும் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசாங்கத்துக்கு எதிராக செயற்படுவதற்காக சுமார் 5 ஆயிரம் இளைஞர்களை அமெரிக்க தூதரகம் இணைத்துள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ச குறிப்பிடடதாக தெரிய வருகின்றது. (அ)

# மலையகத்தில் மினி சூறாவளி 300 இற்கும் மேற்பட்ட வீடுகள் சேதம்

மலையகத்தில் வீசிய பலத்த காற்றினால் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன்சுமார்376 இற்கம்அதிகமான வீடுகள் சேதம் அடைந்துள்ளன. பதுளை பகுதியை சேர்ந்த ஆண ஒருவர் மரம் முறிந்து வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவிக்கின்றது.

நுவரெலியா மாவட்டத்தில் வீசிய பலத்த காற்று காரணமாக 199 வீடுகளுக்கு சேதம் ஏற்பட் டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பி.ஜீ.குமாரசிறி தெரிவிக்கின்றார்.

மாவட்டத்திலுள்ள 196 குடும்பங்களை சேர்ந்த 800 க்கும் அதிகமானோர் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதாீவும் அவர் கூறினார்.

இதேவேளை, மாவட்டத்தில் தற்போது ஒரு தற்காலிக முகாம் ஒன்றும்அமைக்கப்பட்டுள்ளது. பதுளை மாவட்டத்தில் பலத்த காற்று காரணமாக 150 இற்கும் அதிகமான வீடுகளுக்கு சேதம் ஏற் பட்டுள்ளது.

இதேவேளை, இரத்தினபுரி ஹல்பே பகுதியில் வீசிய பலத்த காற்றினால் 30 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக இடர்முகாமைத்துவ மத்திய நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

குறித்த பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்கள் இருவேறு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக இம்புலலே பிரதேச செயலாளர் கீர்த்தி ஜயசிங்க குறிப்பிடுகின்றார்.

இதனிடையே பலத்த காற்று வீசுவதனால் பதுளை, கொழும்பு வீதியின் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபடுவோர் அவதானத்துடன் செயற்படுமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், நாட்டிலும் நாட்டை சூழவுள்ள கடற் பிராந்தியங்களிலும தென்மேல் பருவகாற்று வலுவடைந்துள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிக்கின்றது. (அ)

# ஜனாதிபதி தேர்தலை ரணில் வெற்றி கொள்வார்

## சுஜீவ எம்.பி தெரிவிப்பு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க கட்டாயம் போட்டியிடுவார் எனவும் அவர் நிச்சயம் வெற்றி பெறுவார் எனவும் அந்த கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார். சிங்கள பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்ரமசிங்க கட்டாயம் தேர்தலில் போட்டியிட வேண்டும். கட்சியின் தலைவர் என்ற வகையில் கட்டாயம் தேர்தலில் போட்டியிடுவார் என்பதில் சந்தேகமில்லை.

நாங்கள் முடிந்தளவான ஒத்துழைப்புகளை அவருக்கு வழங்குவோம். அத்துடன் அவர் கட்டாயம் வெற்றி பெறுவார்.

அரசாங்கத்தில் ஊழல், மோசடிகள் இடம்பெற்று வருகின்றன. இந்த பணம் எங்கு போகிறது என்பதை தேடிப்பார்க்க வேண்டியது அவசியம்.

தரகுப்பணம் பெறும் நபர்கள் இதனை மாஃபியாவாக மாற்றிக் கொண்டுள்ளனர்.

பெறப்படும் தரகுப் பணம் டுபாய், மாலைதீவு, சீஷெல்ஸ், அமெரிக்க போன்ற நாடுகளில் உள்ள வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக கூறுகின்றனர்.

வேறு பெயர்கள் மற்றும் நிறுவனங்களில் பெயர்களில் இந்த பணம் வெளியில் செல்கிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மாற்று மக்கள் முன்னணி ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் ஜே.வி.பி

ஒரு மாற்று மக்கள் முன்னணி ஒன்றை ஏற்படுத்துவதற்காக ஜே.வி.பி அரசாங்கம் மற்றும் எதிர்க் கட்சி களின் ஆதரவாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாக தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போதுள்ள அரசியல் முறைமைக்கு மாறான மாற்று அரசியல் முறை ஒன்று நாட்டுக்கு அவசியம் என ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


மாற்று மக்கள் முன்னணி ஒன்றின் தேவை உள்ளது. ரணில் விக்ரமசிங்கவின் முன்னணியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் முன் னணியும் அழுகிய மோசமான முதலாளித்துவ கொள்கைகளையே பின்பற்றுகின்றன.

இந்த ஆட்சி முறையினால் நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்கக முடியாது. புதிய அரசியல் முறை ஒன்றை மக்கள் எதிர்ப்பார்த்துள்ளனர்.

மக்களின் இந்த எதிர்ப்பார்ப்பை பூர்த்தி செய்ய மாற்று மக்கள் சக்தி ஒன்று தேவைப்படுகிறது. இந்த மாற்று மக்கள் சக்தியை உருவாக்கும் பொறுப்பை ஜே.வி.பி ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

இதற்காக ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் உட்பட அனைத்து சமூக மக்களை இணைக்கும் கூட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம்.

இந்த கூட்டமைப்பை தேர்தலுக்கு அப்பாலும் முன்னெடுத்துச் செல்ல நாங்கள் நடவடிக்கை எடுப் போம் எனவும் அவர் கூறியுள்ளார். (அ)



மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் கடந்த புதன்கிழமை நடைபெற்ற போது...
(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# இன்றைய இராசி பலன்

**14.07.2014**

(ஆனி 30, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
துதியை பிற்பகல் 12.58 மணிவரை
திருவோணம் பிற்பகல் 4.10 மணிவரை
இராகுகாலம் 7.30-9.00 மணிவரை
சுபநேரம் 12.00-1.30 மணிவரை
அமிர்த சித்தம்

வளவன்

**மீனம்** – புதிய பொருட் சேர்க்கையுண்டு, அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அதிகரிக்கும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டம் கைகூடும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும்.

**மேடம்** – தொழில் ரீதியாக புதிய கூட்டாளிகள் வந்திணைவர், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வீட்டை அழகுபடுத்தும் எண்ணம் உருவாகும்.

**இடபம்** – செய்தொழிலில் சிறப்புக்கள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, ஆன்றோர் சந்திப்புக்கள் இடம்பெறலாம், புதிய திட்டங்களில் முனைப்புக் காட்டுவீர்கள்.

**மிதுனம்** – பேச்சில் நிதானம் தேவை, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், பிரயாண சுகமுண்டு, கௌரவக் குறைவான நாள்.

**கும்பம்** – சாப்பிடக்கூட நேரமில்லாமல் சில வேலைகளை செய்வீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் வளர்ச்சிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

**கடகம்** – உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், முயற்சிகளில் முன்னேற்றமுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், பயணங்களால் பலனுண்டு, பணவரவுண்டு.

**மகரம்** – பொது நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு, சயன சுகமான நாள்.

**சிம்மம்** – கனிவான தகவல்கள் வந்து சேரலாம், சத்துரு ஜெயமுண்டு, அதிகாரிகள் அனுசரணையாக நடந்து கொள்வர். தன்னம்பிக்கையோடு பணிபுரிவீர்கள், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம்.

**தனுசு** – குடும்பத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறியுண்டு, தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் எடுப்பீர்கள், பொருள் விரயமுண்டு.

**விருச்சிகம்** – சேமிப்பை உயர்த்துவதற்கான வழியைக் கண்டு கொள்வீர்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், அந்நியர் சந்திப்புண்டு, கூட்டு முயற்சிகளில் முன்னேற்றம் கிடைக்கும்.

**துலாம்** – செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வாகன யோகமுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி** – மனநிறைவு கூடும் நாள், தொழில் முன்னேற்றமுண்டு, தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'களனி சக்தி' திட்டத்தில் யாழ்ப்பாணமும் உள்வாங்கல்




களனிசவிய சேவைகளை யாழ்ப்பாணப் பகுதிக்கும் விஸ்தரிக்கும் வகையில், யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் களனி கேபிள்ஸ் பிஎல்சி கைச்சாத்திட்டுள்ளது.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த புரிந்துணர்வு உடனபடிக்கை களனி கேபிள்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோரிடையே களனி கேபிள்ஸ் கேட்போர் கூடத்தில் கைச்சாத்திடப்பட்டிருந்தது.

பாதுகாப்பான இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்களை உற்பத்தி செய்வதில் இலங்கையின் முன்னோடியான வர்த்தக நாமமாக திகழும் களனி கேபிள்ஸ் பிஎல்சி, 2007-ம் ஆண்டு முதல் பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துடன் இணைந்து சமூக பொறுப்புணர்வு செயற் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது.

இந்த திட்டத்தினூடாக தொழில் புரியும் இலத்திரனியல் நுட்பவியலாளர்கள் மற்றும் பாடசாலைக் கல்வியை பூர்த்தி செய்தவர்களுக்கும் பொறியியல் நுட்பவியலாளர்களாக திகழ்வதற்கு அவசியமான ஆளுமைகளை விருத்தி செய்யும் வகையில் அமைந்துள்ளது. களனி சவிய பயிற்சி திட்டத்துடன் இணைந்து கொள்வதற்கு அவசியமான ஒரே தகைமையாக க.பொ.த சாதாரண தர தகைமையை கொண்டிருக்க வேண்டும்.

களனி கேபிள்ஸ் பிஎல்சியின் பிரதம நிறைவேற்று அதிகாரி மஹிந்த சரணபால, இந்த திட்டத்துடன் இணைந்து கொள்ளுமாறு நாட்டின் சகல பல்கலைக்கழகங்களுக்கும் இவர் அழைப்பு விடுத்திருந்தார்.

அனுபவம் அற்றவர்கள் மற்றும பாடசாலை கல்வியை பூர்த்தி செய்து விட்டு சுய வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருந்த நபர்களை இந்த களனி சவிய இலத்திரனியல் பயிற்சி திட்டம் கவர்ந்திருந்தது. களனி சவிய நாட்டின் பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், 200க்கும் மேற்பட்ட இளம் திறமை வாய்ந்த நுட்பவியலாளர்களை உருவாக்கியுள்ளது. இதில் பெரும்பாலானோர் உள்நாட்டு வெளிநாட்டு கம்பனிகளில் பணியாற்றி வருவது டன், தமது வாழ்க்கையில் நிலையான தன்மையை எய்தியுள்ளனர்.

களனி சவிய என்பது க.பொ.த சாதாரண தர தகைமைகளை கொண்டுள்ளவர்களுக்கு சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழக சான்றிதழை பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இது போன்றதொரு திட்டத்தை முன்னெடுக்க உள்நாட்டு தனியார் நிறுவனமொன்றுடன் உள்நாட்டு பல்கலைக்கழகம் கை கோர்த்து செயற்படுகின்றமை இதுவே முதல் தடவை.

பாடசாலை கல்வியை பூர்த்தி செய்யும் மாணவர்கள் மற்றும் முன அனுபவம் அற்றவர்களுக்கு இலத்திரனியல் நுட்பவியலாளர்களாக திகழ்வதற்குரிய சிறந்த வாய்ப்பை களனி சவிய பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்துள்ளது. இல்லங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான வயரிங் மற்றும் பொருத்தும் நடவடிக்கைகள் பற்றிய அறிவு அவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும், சர்வ தேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழும் அவர்களுக்கு கிடைக்கின்றது.

நீங்கள் இந்த திட்டம் பற்றி ஆர்வமுடையவராக இருந்தால், உங்கள முழுமையான சுய விபரக கோவையை கற்கைநெறி பணிப்பாளர், களனி சவிய, பொறியியல் பீடம், யாழ்ப்பாண பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

களனி கேபிள்ஸ் என்பது 100 வீதம் இலங்கையை சேர்ந்த கம்பனியாகும். சுமார் 44 வருட காலமாக இலத்திரனியல் மற்றும் தொடர்பாடல் கேபிள்களை உற் பத்தி செய்வதில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

# இலங்கை வங்கி அறிமுகப்படுத்தியுள்ள 'அபிமான' ஓய்வூதியத் திட்டம்



நாட்டில் மிகச்சிறந்தொரு ஓய்வூதியத் திட்டமான BOC அபிமானத திட்டத்தில் நீங்கள் பதிவு செய்வதன் மூலம் உங்களது அன்றாட வாழ்வில் சஞ்சலமின்றி வாழலாம். 18 வயதுக்கு மேற்பட்ட இலங்கையர்கள் எல்லோருக்கும் இத்திட்டம் வாய்ப்பை வழங்குவதோடு நெகிழ்வுத்தன்மையுடைய தெரிவுகளும் காணப்படுகின்றன.

இது அரச சார்பான அல்லது தனியார் துறை ஊழியர்கள் அல்லது சுயதொழில் புரிவோர் ஆகியோரின் எதிர்காலத்தை நிலையானதொரு ஓய்வூதியத் திட்டத்துடனும் நம்பகமானதொரு உணர்வுடனும் எதிர்காலத்தைப் பற்றிய கவலையின்றி பெருமையுடனும் உறுதியானதொரு ஓய்வூதியத் திட்டத்துடன் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு சிறந்த ஓய்வூதியத் தீர்வாக விளங்குகின்றது.

இத்திட்டம் ஒரு ஓய்வூதியத் திட்டமொன்றாக மட்டுமின்றி ஓய்வு பெறுபவர்களுக்கும் இலங்கையில் வதியாதவர்களுக்கும் முதலீட்டுத் திட்டத்துக்கு தொழில் அதிபர்களுடன் கூட்டாகவோ அல்லது தங்களது ஊழியர்கள் முழுவதுமாகவோ பங்களிப்புச் செய்வதற்கான ஒழுங்குகளை வங்கி மேற்கொண்டுள்ளது.

வாடிக்கையாளர்கள் ஒரே முறையில் தொகையாக கொடுப்பனவொன்றை மேற்கொள்வதன் மூலமோ அல்லது வயது தெரிவு செய்து ஓய்வூதியத்திட்ட தெரிவு, ஓய்வூதிய நன்மைத் தொகை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த பங்களிப்பு தவணை முறை தெரிவும் காணப்படுகின்றது. இவ் விணைந்த உற்பத்தி ஆக்கமானது வாடிக்கையாளர்களுக்கு நிலையானதொரு காலத்துக்கு அல்லது வாழ் நாள் முழுவதற்கும் வாய்ப்புக்களை வழங்குவதுடன் ஓய்வூதியத்திட்டத்தை வைத்திருப்பவர் மரணிக்கும்போது நிதியங்களைப் பெறுவதற்கு நன்மை பெறுநர் ஒருவை நியமிப்பதற்கும் வாய்ப்பளிக்கப்படுகின்றது.

55 வருடங்களுக்கு மேற்பட்ட வாடிக்கையாளர் அவர்களது ஊழியர் சேமலாப நிதியை BOC அபிமானவில் முதலீடு செய்வதன் மூலம் அடுத்த மாதத்திலிருந்து ஓய வூதிய நன்மைகளைப் பெறலாம்.

30 வயதுடைய வாடிக்கை யாளர் ஒருவர் ஓய்வூதியத்திட்டம் தெரிவு 01 இன் பிரகாரம் மாதத்துக்கு ரூபா 10,000 ஓய்வூதிய நன்மையைப் பெற விரும்பின் மாதமொன்றுக்கு ரூபா 1,400- பங்களிப்பை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் வாடிக்கையாளர மாத மொன்றுக்கு ரூபா 30,000/-படி ஓய்வூதிய நன்மையைப்பெற விரும்பின் நன்மை வருமானம் ரூபா 4,200/- (ரூபா 1,400 X 3) செலுத்த வேண்டும்.

ஓய்வூதிய நன்மை வருமானம ரூபா 10,000/- அல்லது ரூபா 10,000/- இன் மடங்குகளை உங்களது சேமிப்புக் கணக்குக்கு வரவு வைக்கப்படுவதோடு இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலிருந்தோ அல்லது ATM பொறியிலிருந்தோ பணம் மீளப்பெறலாம்.




# ஊடக விளம்பரங்களில் 30 சதவீதம் வீணடிப்பு

இந்தியாவில் முன்னணி தொழில் நிறுவனங்கள், தங்கள் வர்த்தகத்தை பெருக்குவதற்காக ஊடகங்களில் செய்யும் விளம்பரச் செலவுகளில் 30 சதவீதம் வீணடிக்கப்படுவதாகவும் மூன்றில் ஒரு பங்கு விளம்பரங்கள், தங்கள் இலக்கை அடைவதில் தோல்வியை தழுவுவதாகவும், தனியார் நிறுவனம் வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் தெரியவந்துள்ளது.

இதுகுறித்த ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,முன்னணி தொழில் நிறுவனங்கள் பலவும் தங்கள் வர்த்தகத்தை பெருக்க, ஊடகங்களில் விளம்பரம் செய்கின்றன.ஆண்டுக்கு விளம்பரங்களுக்காக மட்டும் 30 ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது.ஆனால், இதில் 9,000 கோடி ரூபாய் வரை வீணடிக்கப்படுகிறது. அதாவது 30 சதவீத விளம்பரங்கள் வெற்றியை தேடித் தருவதில்லை. மூன்றில் ஒரு பங்கு விளம்பரங்கள், தங்கள் இலக்கை அடைவதில் தோல்வியைத் தழுவுகின்றன.

உலக அளவில், நிறுவனங்கள் செய்யும் விளம்பரங்களில், 15 முதல், 30 சதவீதம் தோல்வியில் முடிகின்றன.எனினும, சில முன்னணி தொழில் நிறுவனங்கள், 'பிராண்ட் என்ற மாய பிம்பத்தை தோற்றுவிக்கும் விளம்பரங்களை நம்புவதை விட, வாடிக்கையாளர்களின் தேவையை அறிந்து செயல்படுதலே அவசியம்' என தங்கள் விற்பனை பிரிவு அதிகாரிகளுக்கு அறிவுறுத்த துவங்கியுள்ளன.இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### இஸ்லாமிய வங்கிச் சேவைக்கான

# தங்க விருது எச்.என்.பிக்கு

கொழும்பு கலதாரி ஹோட்டலில் அண்மையில் நிகழ்ந்த 2014 இலங்கை இஸ்லாமிய வங்கித் துறை மற்றும் நிதித்துறை விருதளிப்பு விழாவில் ஹட்டன் நஷனல் வங்கியின் HNB அல் நஜாஹ் இஸ்லாமிய வங்கிச் சேவை அதி சிறந்த 2013/2014 இஸ்லாமிய நிதித் துறைக்கான தங்க விருதை வென்றெடுத்துள்ளது.

ஹட்டன் நஷனல் வங்கியின் பணிப்பாளர் சபையும் முகாமைத்துவமும் இணைந்து வங்கியில் அல் நஜாஹ் என்னும் பெயரில் இஸலாமிய வங்கிச்சேவைப் பிரிவை ஆரம்பிப்பதற்கு அனுமதியை வழங்கியதாகவும் இதற்கேற்ப HNB அல் நஜாஹ் இஸ்லாமிய வங்கிச் சேவை 2012 பெப்ரவரி 27-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

# செலான் வங்கியின் பயணிகள் அட்டை அறிமுகம்




செலான் வுங்கியானது இலங்கையின் முதலாவது "பல்-நாணய பயணிகள் அட்டையை" (Multi-Currency Travel Card) 2014 ஜூன் மாதத்தில் அறிமுகப்படுத்தியுள்ளமையால், சர்வதேச பயண அனுபவமானது இப்போது புதிய பரிமாணத்திலான அணுகல்வசதி, பயன்பாடு மற்றும் பாதுகாப்பு தன்மை போன்றவற்றை கொண்டதாக மீள் வரையறை செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்க டொலர், ஸ்ரேலிங் பவுண்ட், யூரோ, சவூதி அரேபிய றியால் மற்றும் அவுஸ்திரேலிய டொலர் போன்ற பல்-நாணய அலகுகளை உள்ளடக்கியதாக விநியோகிக்கப்படுவதுடன் "மைக்ரோ சிப்" உள்ளடங்கியுள்ள செலான் பயணிகள் அட்டையானது, உலகின் எந்தவொரு பாகத்தில் இருந்தவாறும் மேற்குறிப்பிட்ட 5 நாணய அலகுகளிலும் பயன்படுத்துனர்கள் ஏககாலத்தில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக் கூடிய மிகவுயர்ந்த சௌகரியத்தை அளிக்கின்றது.

இவ் அட்டையானது குறித்த நபர சென்றடைகின்ற நாட்டின் நாணய அலகு போன்று இலகுவாக மாறிக் கொள்ளும் (பரிவர்த்தனையாகும்) சிறப்பியல்பை கொண்டது.

அதுமட்டுமன்றி, வீசா அங்கீகாரம் பெற்ற 2.2 மில்லியன் ATM நிலையங்களில் இலவசமாக பணத்தை மீளப் பெறக்கூடிய மிகவுன்னத சௌகரியம் மற்றும் உலகெங்குமுள்ள 30 மில்லியனுக்கும் அதிகமான வர்த்தக நிலையங்களின் ஊடாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கான வசதி போன்றவற்றையும் இவ் அட்டை அளிக்கின்றது.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,477.51 | 6,661.40 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,610.68 | 3,708.16 ⇧ |

**விலை அசைவுகளின் அடிப்படையில்** | புரள்வு (ரூபா.மில்.) 10,000.695

***உயர்வடைந்த பங்குகள்(ரூ.):*** சிலோன் பிறின்டேர்ஸ்(1750.00), லயன் பிரேவரி (595.10), ஹேலீஸ் பைபரி(42.90), சிரஸ் லிசர்(W)(1.70), பிளக். பவர்(6.30)

***சரிவைக் கண்ட பங்குகள்(ரூ.):*** கூஜே(54.50), சிலோன் லெதர்(W)(0.90), ஹரிச்சந்திர(2020.00), மொரிஷன்ஸ்(200.00), சாம்சன் இன்ரனெட்(55.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 128.79 | 131.66 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 219.86 | 226.14 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 174.15 | 179.86 |
| சுவிஸ் பிராங் | 143.22 | 148.49 |
| கனேடிய டொலர் | 120.36 | 124.45 |
| அவுஸ்திரேலிய டொலர் | 119.96 | 124.49 |
| சிங்கப்பூர் டொலர் | 103.13 | 106.51 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.45 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கடற்படையினர் தமிழர்களை தாக்கினர்

## சிங்கள யுவதி சாட்சியம்

(கொழும்பு)

நியூஸிலாந்துக்குச் செல்லும் வழியில் படகு பழுதடைந்தமையால், அவுஸ்திரேலிய கடற்படையினரால் இடைமறிக்கப்பட்டு பின்னர் இலங்கைக்கு திருப்பியனுப்பப்பட்டவர்களில் உள்ளடங்கியிருந்த நான்கு தமிழர்களையும் இலங்கை கடற்படையினர் தாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை குறித்த நான்கு தமிழர்களுடன் சென்ற மேலும் 37 பேர் சார்பில் அவுஸ்திரேலிய கடற்படையினருக்கு எழுதப்பட்ட கடிதத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தாம் நியூஸிலாந்துக்கு செல்லும் வழியில் படகு பழுதடைந்தமையால், நியூஸிலாந்திடம் அவசர உதவி கோரப்பட்டது.

இதன்போது அவுஸ்திரேலியாவின் எஸ்ஓஎஸ் மெரைன் 157 என்ற கப்பல் வந்து தம்மை காப்பாற்றியது.

இதனையடுத்து சந்தோசமடைந்த தம்மை, அவுஸ்திரேலிய சுங்க மற்றும் எல்லைப் பாதுகாப்பு படையினர் தமது கப்பலில் ஏற்றினர். இதன்பின்னர் தாம் வீடியோ மூலம் விசாரணை செய்யப்பட்டதாக கடிதத்தை எழுதியுள்ள யுவதி தெரிவித்துள்ளார்.

இதன்போது அவுஸ்திரேலிய படையினர் தம்மை வித்தியாசமான ரீதியாக நடத்தினர். தமது பிரச்சினைகளை கூறுவதற்கும் அவர்கள் வழிவிடவில்லை.

இந்தநிலையில் தம்மை ஏற்றிவந்து இலங்கை கடற்படையினரின் கப்பலில் ஏற்றும் வரையில் தாம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறோம் என்பதை அறியவில்லை என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது தம்முடன் வந்த நான்கு தமிழர்களையும் இலங்கையின் கடற்படையினர் தாக்கியதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் ஒருவரின் முகத்தில் இலங்கையின் கடற்படைவீரர் ஒருவர் குத்திய போது அவருக்கு இரத்தம் பீறிட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## குடும்பப் பெண் காயம்

(கனகபுரம்)

தலையில் பலத்த வெட்டுக் காயமடைந்த நிலையில் குடும்பப் பெண்ணொருவர் நேற்று கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பெரியபரந்தனைச் சேர்ந்த சந்திரவதனி பிரபாகரன் (வயது 31) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ-259)

## சுங்கத் திணைக்களத்திற்கு புதிய கட்டடம் திறப்பு

200 வருட சுங்கத்திணைக்கள வரலாற்றில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட 11 மாடிக் கட்டடம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது.

சுங்கத் திணைக்கள புதிய கட்டட திறப்பு விழாவை முன்னிட்டு சுங்க வாரம் அனுஷ்டிக்கப்பட்டது.

அத்துடன் இந்த திணைக்கள கட்டடத்தை பாடசாலை மாணவர்கள் நேரில் கண்டுகளிக்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

சுங்கத்திணைக்களத்தினால் திடீர் முற்றுகைகள் மேற்கொள்ளப்படுவது, சமூக நலனுக்காக மட்டுமன்றி தேசிய வருமானத்தில் அரைபகுதி வருமானம் இத்திணைக்களத்தினால் பெறப்படுவதாக சுங்கத்திணைக்கள பணிப்பாளர் நாயகம் ஜகத் பீ.விஜேவீர தெரிவித்தார். (அ)


## நிரந்தர வேலைவாய்ப்பு

அனுபவம் உள்ள, அற்றவர்களுக்கான நிரந்தர 'வேலைவாய்ப்பு' சிங்களம் அவசியமில்லை. கொழும்பை அண்மித்த நவீன தொழிற்சாலைகளான (ஜேம்/கோடியல்/பிஸ்கட்/பால்மா/கிளவுஸ்/பொலித்தீன்/தேயிலை/ஆடை) என்பவற்றுக்கு உற்பத்தி/லேபல்/பொதியிடல்/களஞ்சியப் பிரிவுகளுக்கு 18-50 வயது ஆண்+பெண் தேவை. உணவு, தங்குமிடம் குறைந்த விலைகளில். சம்பளம் 19000/-, 27000/-, 35000/- (குழுக்கள்+தம்பதியர்+நண்பர்கள் ஒரே தொழிற்சாலைகளில்) வருகை அன்றே தொழில்.

தொடர்புக்கு: 077 5838231 (C-7816)

## யா/கொக்குவில் இந்துக் கல்லூரி ஊடகக்கழகம் வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்தும்

ஊடக எழுத்தறிவு தினம்-2014

காலம்:- 15.07.2014 (செவ்வாய்க்கிழமை)
நேரம்:-முற்பகல் 10.00 மணி
இடம்:-பஞ்சலிங்கம் கேட்போர்கூடம்
தலைவர்:- செல்வன் வி.விஷ்ணுஜன்
(தலைவர்- ஊடகக்கழகம்)

**பிரதம விருந்தினர்**

உயர்திரு. இ.இளங்கோவன்
(செயலாளர்- ஆளுநர் செயலகம், வடமாகாணம்)

**சிறப்பு விருந்தினர்**

திரு.செ.உதயகுமார்
(கல்விப் பணிப்பாளர்- யாழ். கல்வி வலயம்)

திரு. லெனின் அறிவழகன்
(உதவிக் கல்விப் பணிப்பாளர்) வடமாகாணக் கல்வித்திணைக்களம்)

திரு.அ.அகிலதாஸ்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர்-நல்லூர்)

**கௌரவ விருந்தினர்**

கலாநிதி சி.ரகுராம்
(சிரேஷ்ட விரிவுரையாளர்- தொடர்பாடல் கற்கைகள், கிழக்கு பல்கலைக்கழகம்)

**நிகழ்ச்சி நிரல்**

- மங்கல விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- வரவேற்புரை
- தலைமையுரை
- வாழ்த்துரை:- திரு.வே.ஞானகாந்தன் (அதிபர்-கொக்குவில் இந்துக் கல்லூரி) அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை (ஊடகத்துறை விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழகம்)
- விபரண இறுவெட்டு வெளியீடு
  கற்றல்வள இறுவெட்டு வெளியீடு
- சிறப்பு விருந்தினர் உரை
- தொடர்பாடல் ஊடகக் கற்கை சார் நூல்களின் அறிமுகம்
- கௌரவ விருந்தினர் உரை
- ஊடகவியலாளர் ஆய்வு நூல் வெளியீடு
- சிறப்பு பிரதிகள் வழங்கல்
- வெளியீட்டுரை:- ஓய்வு நிலைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி (கல்வியியற்றுறை, யாழ். பல்கலைக்கழகம்)
- ஊடக விருது வழங்கல்
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- கல்லூரிக்கீதம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஊடகக்கழகம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி

(இ)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532

## உங்கள் ஆலய திருவிழாக்களில்...

அகில உலகப் புகழ் ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினரை அழைத்து மகிழ விரும்புகிறீர்களா? (30.07.2014 வரை)



தொடர்பு:- வில்லிசைச் சக்கரவர்த்தி கலைமாமணி, டாக்டர் எஸ். எஸ். சர்மா (குருஜீ) சங்கானை, முருகமூர்த்தி கோவிலடி. T.P.0777064247

(6891)

## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் 4<br>கி.பா: 39.5 செவ் 1 இல்<br>உயரம்: 173 cm<br>தகைமை/தொழில்: BSc, MSc / கணக்காளர் (UK – Business visa)<br>தொ.இ: B/3379 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: 20.5 சூரி செவ் 10 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: தாவரவியல் சிறப்பு பட்டதாரி / , உதவி விரிவுரையாளர்<br>தொ.இ: G/3388 |
| பிறப்பு: 1973 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 2<br>கி.பா: 57 செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L, CIMA – I / Asst. manager (UK - PR)<br>தொ.இ: B/3381 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 1<br>கி.பா: 14.5<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/3393 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 4<br>கி.பா: 36.75 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/3382 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 4<br>கி.பா: 100.75 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: நுண்கலைமாணி - இறுதியாண்டு<br>தொ.இ: G/3397 |
| பிறப்பு: 1980 கிறிஸ்தவம் (RC)<br>தகைமை/தொழில்: O/L / கடற்தொழில்<br>தொ.இ: B/3385 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 52<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.Com / நிரந்தர அரச உத்தியோகம்<br>தொ.இ: G/190 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புகலிடக்கோரிக்கையாளர்களின் பெயர் விபரங்களை வெளியிடுக

## தமிழ் சிவில் சமூக அமைப்பு ஆஸி.தூதுவருக்கு கடிதம்

அவுஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு நாடு கடத்தப்படும் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள திருகோணமலை தமிழ் சிவில் சமூக அமைப்பு இவ்வாறு இலங்கை கடற்படையிடம் கையளிக்கப்புடும் புகலிடக் கோரிக்கையாளர்களின் பெயர் விபரங்களை வெளியிட வேண்டும் எனக் கோரி இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

புகலிடக் கோரிக்கையாளர்கள் இவ்வாறு கையளிக்கப்படும் பட்சத்தில் அவர்களின் உறவினர்கள், அவர்கள் இந்தியாவில் இருந்தாலென்ன இலங்கையில் இருந்தாலென்ன கைது செய்து தடுத்து வைத்திருக்கும் நபர்கள் தொடர்பாகத் தகவலைத் தெரிந்து கொள்ளும உரிமையை பெற்றுள்ளார்கள். தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் தொடர்பாடல் தடைகளை எதிர்கொள்ளக் கூடாது. இவ்வாறு தடுக்கப்பட்டுள்ளவர்களில் சிறுவர்கள் இருப்பார்களாயின், அவர்கள் இச்சந்தர்ப்பத்தில் கடும் ஆபத்துக்களை எதிர்நோக்க நேரிடும். ஆதலால் அரசிடம் கையளிக்கப்படுபவர்களின் பெயர்கள் தங்களது அரசினால் வெளியிடப்பட வேண்டும் என நாம் கோருகின்றோம்.

மேலும் இரண்டு நாடுகளும் இவ்விடயத்தை கையாளும் விதமானது, சர்வதேச சட்டங்களை மீறுவதாகவும் அகதிகள் அல்லது புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான உரிமைகளை மீறுவதாகவும் அமைந்துள்ளது என்ற ஐயப்பாடு எழுந்துள்ளது. ஊடகச் செய்திகளின் அடிப்படையில் இவர்கள் இந்தியாவில் ஏற்கனவே புகலிட அந்தஸ்து கோரியிருந்ததாகவும் அங்கிருந்தே அவர்கள் அவுஸ்திரேலியா நோக்கி இடம் பெயர்ந்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

இந்நாட்டில் போர் மட்டுமே நிறைவடைந்துள்ளது. இன்று வரை சிறுபான்மை சமூகங்களின் பிரச்சினைகள் நிவர்த்தி செய்யப்படவில்லை.

சிறுபான்மையினர் இந் நாட்டில் தற்போதும் எவ்வித பாதுகாப்புமின்றி வாழ்கின்றனர். இந்நிலையில் தங்களது நாட்டில் பிரதமர் இலங்கையில் சமாதானம் நிலவுவதாக கூறியுள்ளதை மனக் கவலையுடன் நாம் கருத்திற் கொள்கின்றோம்.

இவ்வாறு வழங்கப்படுகின்ற தகவல்கள் இலங்கையில் வாழும் சிறுபான்மை சமூகங்கள் எதிர்கொள்கின்ற உண்மை நிலையினை உணர்த்த போதுமானதாக இல்லை, அல்லது தவறானவையாக இருக்கின்றன. என்பதையே அவரது கூற்று சுட்டிக்காட்டுகின்றது.

இதனடிப்படையில் நடுக்கடலில் கைதாகி திருப்பி அனுப்பப்பட்டவர்களின் பெயர், விபரங்களை வெளியிடுவதன்மூலம் சட்ட உதவிகளை வழங்க முடியுமென திருகோணமலை தமிழ் சிவில் சமூக அமைப்பின் சார்பில் வணக்கத்திற்குரிய பிதா வி.யோகேஸ்வரன் தலைமையில் கையொப்பமிடப்பட்டு அக்கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (அ)




கரணவாய் மத்தி, மேற்கு, தெற்கு ஆகிய கிராமங்களில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நெல்லியடிப் பொலிஸார் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களை படத்தில் காணலாம். (படம்:கரணவாய் செய்தியாளர்)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 500 | 450 | 450 | 500 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 40 | 60 |
| கோவா | 150 | 120 | 100 | 130 |
| கரட் | 200 | 160 | 150 | 20 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 |
| புடோல் | 60 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60-120 | 80 | 80 | 80 |
| பெரிய வெங்காயம் | 90 | 40 | 90 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 120 | 120 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 80 | 100 |
| பயற்றங்காய் | 100 | 140 | 120 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 100 | 100 |
| பீற்றூட் | 100 | 130 | 100 | 120 |
| கறிமிளகாய் | 400 | 240 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 150 | 150 | 160 |
| போஞ்சி | 100 | 120 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 50 | 80 | 50 | 80 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 30 | 30 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-40 | 30 | 30 | 25-30 |
| இராசவள்ளி | 120 | 100 | 100 | 100 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 74

சாரு நிஷா




தவழும் குழந்தை நடக்கும் போது, பலமுறை கீழே விழுந்தாலும் மீண்டும் எழுந்து நடக்க முயற்சிக்கும். தோல்வி என்பது நிரந்தரம் அல்ல. அது தற்காலிகம்தான். தொடர் முயற்சி ஒருநாள் வெற்றி தரும் என்று பெரியோர்களுக்கு சொல்லாமல் செயலில் காட்டுகிறது குழந்தை.

விதுரன் விது




முகேஷ் முகேஷ்ராம்

இது புளூட்டோவில் இருந்து எடுக்கப்பட்டது. இதில் பூமியின் மிகப்பெரிய நிலப்பரப்பு, அப்படின்னு சொன்னாலும் நீங்க நம்பத்தான்போறீங்க...!



ஆனாலும் நா உண்மைய சொல்லுறேன்... இது "வடை சட்டியின் அடிப்பாகம்"

சபே கேரீவி

**கடவுள் கிட்டயும், டாக்டர் கிட்டயும் கோபமா பேசக்கூடாது...**


கடவுள் டென்ஷன் ஆனா உடம்புக்கு நோய் வரவச்சு டாக்டர்கிட்ட அனுப்புவார்...

டாக்டர் டென்ஷன் ஆனா கடவுள்கிட்ட அனுப்பிடுவார்...

லாவணியா துரைரத்தினம்



சரவணபவன் கௌமாறன்



முள்ளின் திறமையை பாருங்கள்... காலால் மிதித்தவனை கையால் எடுக்க வைக்கின்றது...!!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னார் ஊடகவியலாளருக்கு நான்காம் மாடிக்கு அழைப்பு

மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர் எஸ்.ஆர். லெம்பேட் இரண்டாவது தடவையாக மீண்டும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரின் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக எஸ்.ஆர். லெம்பேட் தெரிவிக்கையில்,

மன்னார் மூர்வீதியில் உள்ள என்னுடைய வீட்டிற்கு மன்னார் பொலிஸாரினூடாக கடந்த வெள்ளிக்கிழமை அழைப்பாணைக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

326-14 இலக்கம் கொண்ட குறித்த கடிதத்தில் ஊடகவியலாளரான எஸ்.ஆர்.லெம்பேட் என்பவரிடம் வாக்குமூலம் பெறுவதற்காக கொழும்பு குற்றத்தடுப்பு (ரி.ஐ.டி) காரியாலயத்திற்கு திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வருகை தருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் ஏன்? எதற்காக விசாரணைகளுக்காக அழைக்கப்படுகின்றேன் என்ற விடயம் இதுவரை தெரியவில்லை என்றார்.

இந் நிலையில் இதே ஊடகவியலாளர் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 9ஆம் திகதி அன்று முதல் தடவையாக கொழும்பு பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரின் விசாரணைகளுக்காக கொழும்பிற்கு அழைக்கப்பட்டு சுமார் 3 மணி நேரம் தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். (அ-250)

# அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்க கிராம மட்ட அபிவிருத்தி குழுக்கள்

## வவுனியாவில் உருவாக்கப்பட்டன

(குருமன்காடு)

வவுனியா பிரதேச செயலகத்திற்குரிய மிகவும் பின்தங்கபட்ட கிராமங்களில் கிராமமட்ட அபிவிருத்திக்குழுக்களை நேற்று முன்தினம் சனிக்கிழமை கைத்தொழில் வாணிப அமைச்சரும் வவுனியா மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவருமான ரிசாத் பதியுதீனுடைய இணைப்பாளர்கள் உரு வாக்கியுள்ளனர்



முதற்கட்டமாக சோமால புளியங்குளம், கந்தன்குளம், புலவனூர், பூம்புகார் ஈஸ்வரிபுரம் மறவன்குளம் கோதண்ட நொச்சிக்குளம் மற்றும் கட்டையர்குளம், போன்ற பின்தங்கிய கிராமங்களில் இக் கிராமமட்ட அபிவிருத்திக் குழுக்கள் உருவாக்கப்பட்டன.

எதிர்காலத்தில் செய்யப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் இவர்கள் மூலமாக செய்யப்படும் அதே வேளை கிராமத்தில் உள்ள அபிவிருத்தித் வேலைத்திட்டங்கள், வேலை வாய்ப்புக்கள் மற்றும் பல அபிவிருத்தி விடயங்கள் சம்பந்தமாகவும் முன்மொழியும் பொறுப்பும் முடிவெடுக்கும் பொறுப்பும் கிராம மட்ட அபிவிருத்திக்குழுக்களுக்கு உண்டு .

இவ் அமைப்புக்களுடன் அமைச்சர் ரிசாத் பதியுதின் நேரடி தொடர்பு வைத்திருப்பார் என அவருடைய இணைப்பாளர் ஐ. எஸ்.எம். மொய்தின் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நகரசபை உறுப்பினர் அப்துல் பாரி, பிரதேசசபை உறுப்பினர்களான ஜோஜ் மற்றும் கட்டைமரிகான், எம். கலில் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (அ-250)




# புதிய ஐயன்குள வாய்க்கால்களை விரைவில் புனரமைத்து தாருங்கள்

## விவசாயிகள் கோரிக்கை

(கிளிநொச்சி)

மழைக்காலத்திற்கு முன்னர் பிரதான வாய்க்கால்களை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் இதன்மூலம் தாம் நன்மையடையலாம் எனவும் மலையாளபுரம்மக்கள்தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி மாவட்டம், மலையாளபுரத்திலுள்ள புதிய ஜயன் குளம் இங்குள்ள விவசாயிகளுக்கு முக்கியமானதாகும். இதை நம்பியே இங்குள்ள விவசாயிகள் நெற் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி குளம் கடந்த 1990 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டதுடன் 2010 ஆம் ஆண்டு மீள் குடியேற்றத்தின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் 58 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் ஐக்கிய நாடுகளின் உணவு விவசாய ஸ்தாபனமும் மற்றும் கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தினதும் பங்களிப்புடனும் கடந்த 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெற்றன.

இக்குளத்து நீரை பயன்படுத்தி 150 ஏக்கருக்கு மேல் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் இதன் பிரதான 5 வாய்க்கால்களும் உரிய முறையில் புனரமைப்பு செய்யப்படாமையினால் நீர் வீண் விரயமாவதுடன் கிளை வாய்க்காலின் முடிவிலுள்ள அல்லது தொலைவிலுள்ள வயல்களுக்கு நீரைப்பெறுவதில் மிகவும் சிரமம் உள்ளதாக கூறப்படுகின்றது.

துருசுகள் நல்லமுறையில் இருந்தாலும் பிரதான வாய்க்கால்களின் சீரின்மை காரணமாகவே இக்குறைபாடு உள்ளதாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது வரட்சி காரணமாக மேற்படி குளத்து நீர் வற்றியுள்ள நிலையில் பிரதான 5 வாய்க்கால்களையும் உரிய முறையில் வரம்புகள் உயர்த்தப்பட்டு புனரமைப்புச் செய்வதன்மூலம் எதிர்வரும் மாரி காலத்தில் மேற்கொள்ளப்படும் காலபோக நெற்செய்கையின் போது பெரிதும் பயனுடையதாக இருக்கும் எனவும் இது தொடர்பாக பொது மக்களாலும் புதிய ஐயன்குள கமக்கார அமைப்பினராலும் பல தடவைகள் கரைச்சி பிரதேச சபையிடம் முறையிட்டுள்ள போதும் இது தொடர்பில் இன்று வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இப்பகுதி மக்களின் முக்கிய வாழ்வாதாரத்திற்கு உதவக்கூடிய வகையில் விரைவாக புதிய ஐயன் குளத்தின் பிரதான 5 வாய்க்கால் களையும் சீரான முறையில் புனரமைத்துத் தரும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-27)

# பாரதிபுரம் பகுதி மக்களுடன் த.தே.ம. முன்னணி சந்திப்பு

(குருமன்காடு)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாரதிபுரம் பகுதி மக்களுக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் அப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் குடிதண்ணீர் பிரச்சினை உட்பட பல பிரச்சினைகள் மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

- குறிப்பாக வறட்சி காரணமாக அப்பகுதியிலுள்ள கிணறுகள் அனைத்தும் வற்றியுள்ளதுடன், எஞ்சியுள்ள கிணறுகள் உப்புநீராக மாறியுள்ளதாகவும் அதனால் குடிப்பதற்கும், சமைப்பதற்கும், கூட நீரை பெற முடியாத நிலையில் நீண்ட தூரம் நடந்துசென்று தண்ணீர் பெற வேண்டியுள்ளதாகவும். பல நாட்களுக்கு ஒரு தடவையே தூர இடங்களுக்குச் சென்று குளிக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.


குடிநீர் பெறுவதற்கு ஆவன செய்யுமாறு கிராமசேவகர் ஊடாக அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரி வித்துள்ளனர்.

மேலும் தமது பிள்ளைகள் கல்வி பயிலும் பாரதிபுரம் பாடசாலையின்கிணறு சுத்தம் இல்லாமல் இருப்பதாகவும், அதனால் நூற்றுக் கணக்கான பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலையில் பிள்ளைகள் சுத்தமில்லாத நீரைப் பருகுவதால் நோய்த்தாக்கம் ஏற்படும் ஆபத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு தமது குடிநீர்ப் பிரச்சினையை தீர்க்க ஆவன செய்து உதவுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்திடம் அம்மக்கள் கோரியுள்ளனர்.

மேற்படி சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.

இச் சந்திப்பில் கட்சியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர். (அ-250)



வவுனியா ஓமந்தை மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை திறப்பு விழா கடந்த வியாழக்கிழமை கல்லூரி அதிபர் திருஞானசம்பந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்ற போது....

(படம்:-குருமன்காடு செய்தியாளர்)

# குளவிகளை அழிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்

## வவு.பேருந்து நிலைய வர்த்தகர்கள் கோரிக்கை

(குருமன்காடு)

எப்போதும் மக்கள் மீது தாக்கும் குளவிகள் வவுனியா நீர்த்தாங்கியில் உள்ளமை தொடர்பில் எவரும் நடவடிக்கை எடுக்காமை ஆபத்தான விடயம் என வவுனியா பேருந்து நிலைய வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பராமரிப்பில் வவுனியா பேருந்து நிலையத்திற்கு அருகாமையில் உள்ள வவுனியா நீர்த்தாங்கியில் உள்ள இக் குளவிகள் அதிகாலை வேளையில் வர்த்தக நிலையங்களுக்கு செல்பவர்கள் மீது கொட்டுவதாக இப்பகுதி வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையத்தில் கடமையாற்றும் பலருக்கு இக் குளவிகள் கொட்டியமையினால் இருவர் வவுனியா பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் வவுனியா பேருந்து நிலைய வர்த்தக சங்கத்தின் செயலாளர் எஸ். ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை நீர்த்தாங்கியை அண்மித்துள்ள அரச ஊழியர்களின் விடுதிகள் யாழ் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் என்பனவும் இக் குளவிக்கூட்டினால் அச்சமடைந்த நிலையில் இருப்பதாகவும் நீர்த்தாங்கியில் உள்ள குளவிக்கூட்டினை அழிக்காமையினால் அது தற்போது அருகில் உள்ள மரங்களிலும் பரவி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந் நிலையில் கடும் காற்று வீசி வருவதனால் இக் குளவிக் கூடுகள் விழும் பட்சத்தில் பலருக்கு ஆபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக, நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் வவுனியா மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றுக்கு தெரியப்படுத்தியும் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் வவுனியா பேருந்து நிலையதில் அமைந்துள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மானிப்பாய் இந்துக் கல்லூரியின் வருடாந்த நாடக விழா கல்லூரியின் வி.எஸ்.துரைராஜா திறந்த வெளி அரங்கில் அண்மையில் எஸ். சிவநேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நாடகத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மல்லாகம் செய்தியாளர்)







யாழ். இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் கல்லூரியின் குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற போது... (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)






உடுவில் மகளிர் கல்லூரியின் ஊடகக் கண்காட்சி அண்மையில் இடம்பெற்ற போது...

நிகழ்வின் நிழல்கள்






பாதீனியம் செடி ஒழிப்பில் முன்னிலை பெற்றவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு சிறுப்பிட்டி ஜனசக்தி சனசமூக நிலையத்தில் அண்மையில் நடைபெற்ற போது... (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்று நோய் சிகிச்சைப் பிரிவுக்கு நாவலர் நற்பணி மன்றத்தின் தலைவர் ந.கருனைஆனந்தன் குடி தண்ணீர் வசதிகளை ஒரு இலட்சம் ரூபா செலவில் அண்மையில் அமைத்துக் கொடுத்தார். இதற்கான நிகழ்வுகளை படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

வைகாசிப் பூரணை ஆராதனை தின நிகழ்வுகள் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அண்மையில் நடை பெற்ற போது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## "சாதனை நாயகனின் சரித்திரம்"



மாமா வீட்டில் தங்கி இருந்தான்.

தன்னிடம் பயிற்சி பெறுபவர்கள் எதிர்காலத்தில் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களாக வரவேண்டும் என்பதில் அச்ரேகர் உறுதியாக இருந்தார். கடுமையான பயிற்சி மட்டுமே திறமையை வளர்க்கும் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. வலைப் பயிற்சி அளிப்பதுடன் தன்னிடம் பயிற்சி பெறுபவர்களையே இரு குழுக்களாகப் பிரித்து அவர்களிடையே


## ஆச்சார்ய அச்ரேகர்

05

கிரிக்கெட் பயிற்சிக்கு தடைமல்வரவேண்டுமானால், பாந்தரா பள்ளியை விட்டு சாரதா ஆஷ்ரா பள்ளயில் சேர வேண்டும். எனவே, படிப்பா அல்லது கிரிக்கெட்டா என்று முடிபு செய்ய வேண்டிய இக்கட்டான நிலை. பாந்தரா பள்ளி பொறியியல் மற்றும் மருத்துவத் துறைகளுக்குச் செல்ல தரமான கல்வியை வழங்கும் பள்ளி. ஆனால், சாரதா ஆஷ்ரம் பள்ளியோ கிரிக்கெட்டிற்கு முக்கியத்துவம் தரும் பள்ளி. தந்தை ரமேஷ் டெண்டுல்கருக்கு சச்சின் பொறியாளராகவோ அல்லது மருத்துவராகவோ வரவேண்டும் என்று ஆசை. ஆனால், சச்சினுக்கோ கிரிக்கெட் மீதுதான் பிரியம். எனவே, மகனின் ஆசைக்கு தடை போடாமல் சாரதா ஆஷ்ரம் பள்ளியில் சேர பச்சைக்கொடி காட்டினார். எனவே, அஜீத் இதற்கு ஒரு ஏற்பாடு செய்தார்.

சச்சினின் மாமா வீடு சிவாஜி பூங்கா மைதானத்திற்கு எதிரிலேயேயிருந்தது. எனவே, சச்சின் இனி தனது மாமா வீட்டிலேயே தங்கிப் படிக்க வேண்டும். தனது கிரிக்கெட் விளையாட்டுப் பயிற்சியையும் அங்கிருந்தபடியே மேற்கொள்ள வேண்டும் என்று முடிவானது. ஆனால், இறுதி முடிவெடுக்க வேறொரு காரணியும் இருந்தது. நண்பர்களுடன் சேர்ந்து சச்சின் அடிக்கும் லூட்டியைத் தாங்க முடியாது. ஒருநாள் சச்சின் வழக்கம்போல தன்னுடைய நண்பர்கள் புடைசூழ மாங்காய் பறிப்பதற்காக ஒரு வீட்டின் கூரை மீது ஏறி அங்கிருந்த ஒரு மரத்தின் கிளை மீது தாவ முனைந்தான். ஏற்கனவே அங்கு ஒரு பையன் ஒடிசலான ஒரு மரக்கிளை மீது அமர்ந்து கொண்டு சச்சின் மேலே ஏறி வந்தால் கிளை ஒடிந்து விடும் என்று எச்சரித்துக்கொண்டிருந்தான். சொல்பேச்சுக் கேட்கிற வயசா சச்சினுக்கு.

சச்சின் மரக்கிளைக்குத்தாவ, எடை தாங்காமல் மரக்கிளை ஒடிய இருவரும் கீழே வீழ்ந்தார்கள். உள்ளே டிவி பார்த்துக்கொண்டிருந்த அனைவரும் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடிவர சச்சினும் அவனது நண்பனும் வலியை மறந்து ஓட்டம் பிடித்தார்கள். பார்த்தார்கள் பெரியவர்கள். இவனை இங்கேயே விட்டு வைத்தால் படிப்பும் சரி, விளையாட்டும் சரி, எதிலும் இவனது கவனம் போகாது என்று உடனடியாக சாரதா ஆஷ்ரம் பள்ளியில் சச்சினைச் சேர்க்க முடிபு எடுத்தார்கள். அன்றுமுதல் சச்சினுக்கு உறக்கம், விழிப்பு, சாப்பாடு, நடை, ஓட்டம் சகலமும் கிரிக்கெட் தான். 1988 இல் பங்கு பெற்ற முதல் நிலை கிரிக்கெட் போட்டிகள் வரை சச்சின் தனது



சச்சினின் குருவாக இருந்த ராம்காந்த் அச்ரேகருடன் சச்சின் டெண்டுல்கர்

போட்டிகள் நடத்துவார். நகரில் எங்கெல்லாம் போட்டிகள் நடைபெறுகின்றனவோ அங்கெல்லாம் இவர்களை அழைத்துச் சென்று விளையாடச் சொல்லுவார். குறிப்பாக சச்சினைத் தனது ஸ்கூட்ரில் ஒவ்வொரு மைதானத்திற்கும் அழைத்துச்சென்று பல்வேறு குழுக்களுக்கு எதிராக விளையாட வைப்பார். ஒரு போட்டியில் நன்றாக விளையாட முடியவில்லையா கவலை வேண்டாம். அடுத்த போட்டியில் சரியாக விளையாடு என்று ஊக்கப்படுத்துவார். ஒவ்வொரு குழுவிலும் விதவிதமாகப் பந்து வீசும்பௌலர்கள் இருப்பார்கள். ஒவ்வொருவரின் பந்துவீச்சும் வெவ்வேறு விதமாக இருக்கும். எனவே, பலதரப்பட்ட பௌலர்களிடம் சச்சின் பேட்டிங் பழக வேண்டும் என்ற நோக்கிலேயே அச்ரேகர் எல்லாக் குழுவிற்கு எதிராகவும் அவனை விளையாடச் செய்தார். தூங்கும் நேரம் தவிர சச்சினுக்கு எப்போதும் கிரிக்கெட், கிரிக்கெட் தான்......

*(தொடரும்)*

கே.ரமேஷ்

> தன்னிடம் பயிற்சி பெறுபவர்கள் எதிர்காலத்தில் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களாக வர வேண்டும் என்பதில் அச்ரேகர் உறுதியாக இருந்தார். கடுமையானபயிற்சிமட்டுமேதிறமையை வளர்க்கும் என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கை. சச்சினைத் தனது ஸ்கூட்டரில் ஒவ்வொரு மைதானத்திற்கும் அழைத்துச் சென்று பல்வேறு குழுக்களுக்கு எதிராக அவர் விளையாட வைப்பார்!

# உங்கள் பிறந்த எண் 06 இல் கூட்டெண் 02 இன் பலன்கள்

40

### தோற்றம்

சுக்கிரனுடன் சந்திரன் இணைந்து உண்டாகும் ஆதிக்கம். அளவான உயரமுடையவர். பெண்மை கலந்த தோற்றத்தில் மிக அழகாக இருப்பார். அடர்ந்த முடி அழகாய் அமைந்திருக்கும். புருவங்கள் நன்கு அமைந்திருக்கும். பற்கள் முத்துப்போல் வரிசையாக இருக்கும். கன்னங்கள் பருத்து தாடை உறுதியாக உதடுகள் சதைப்பிடித்து இருக்கும். நெற்றி அகலமாக மூக்கு சிறுத்து இலேசாக மேல் தூக்கியதாக இருக்கும். கண்கள் அழகாக அகலமாக இருக்கும். வெளிப்பட்ட மாதிரி இருக்கும். கைகால்களை அசைத்துப் பேசும் போதும் செயற்படுத்தும் போதும் பார்ப்பவர் வசிப்படுவர். பரபரப்பாக வேகமாக நடப்பர். பேசுவர் சிவப்பாக இருப்பர்.

### குணம்

செல்லமாக செல்வாக்காக பிறந்து வாழ்வர். எதிர்த்துப் பேசுவர். தர்க்க ரீதியாகப் பேசுவர். பேச்சுச்சண்டை போடுவதிலும் திறமைசாலி. இதேபோல அரட்டை அடிப்பதிலும் உல்லாசமாகப் பேசி மயக்குவதிலும் பிறரை மகிழ்வு செய்வதிலும் கெட்டிக்காரர்கள்.

உலக இனிய அனுபவங்களைப் பெறவே, வாழ்க்கை வாழ்வதற்கே எனும் கொள்கை உடையவர்கள். இதனால் பாட்டு சித்திரம், ஆட்டம், விளையாட்டு என்று உண்டு, குடித்துக் கழிப்பர். ஜாலியாக பொழுதைக் கழிப்பர்.

நன்றாக படிப்பார். இசை, நடனம் பயிலுவர். உடல் வேகம்போல மனவேகமும் கொண்ட இவர்கள் சிறந்த கலைஞர்களாவர். உணர்ச்சிவசப்படக் கூடியவர். எவர் எதைச் சொன்னாலும் நம்பி விடுவதும் வேண்டியவர் மேலும் சந்தேகம் கொள்வதும் இவர்கள் வழக்கம் எடுப்புார். கைப்பிள்ளைகளாவர். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஒரு முடிவிற்கு வருவார்.

கற்பனை இவர்களை இழுத்துச் சென்று நடைமுறை உலகை மறக்கடிக்கும். முகதுதிக்கு மயங்கி கையிலுள்ளதையும் தந்துவிடுவர். இதனால் இலேசான சோம்பலுக்காளாகி செய்ய வேண்டியதை தாமதமாகச் செய்வர். அநியாயத்திற்கு துணை போவர். குதர்க்கமும் விதண்டாவாதமும் செய்வார். இதன்மூலம் வம்பு வளர்த்துப் பிறர் வெறுப்பிற்காளாவர்.

மனம் இப்படியும் அப்படியும் ஊஞ்சலாடும். உண்மையறியாமல் குழப்பம் ஏற்படும். நிதானமாக இருந்தால் எது என்ன என்று அறிவார். பிடிவாதமும் செய்வார். குழந்தை போலவும் நடப்பார். அச்சமும் இவரிடம் இருக்கும்.

சந்தோஷமும் குழப்பமும் உணர்ச்சிவசப் படுவதும் [illegible] காட்டும். [illegible] கவியும் கலை ஈடுபாடும் திறமையும் இவரை மாபெரும் மனிதராக காட்டும். இவர்களுடைய அதிர்ஷ்டம் இவரை வெற்றிபெறச் செய்யும். சமயத்திற்கேற்ப பேசி நடந்து வெற்றியுடன் ஆனந்தமும் கொள்ளுவர். இரக்கம் இவரை ஏமாளியாக்கிவிடும். நண்பர்களும் வீட்டாரும் இவர்களுக்கு நிறைய உதவுவர்.

சகவாசம் அமைவதற்கேற்ப தீய பழக்கங்கள் அமையும். குடியும் போதைப்பாக்கு போடுதலும் பொடி போடுதலும் போதை, பீடா போடுதலும் பெண் தொடர்பு ஏற்பட்டு விடலாம்.

### குடும்பம்

இவர்கள் காதலித்தாலும் குடும்ப வழக்கப்படிதான் பெரியோர் பார்த்து வைத்தவரையே மணப்பர். ஏனெனின், அச்சம்– ஒரு நிலையற்ற மனம் காரணமாகும். அமைகிற மனைவி அல்லது வாழ்க்கைத் துணைவர் நன்கு அமைவர். நல்ல வாரிசும் அமையும். இவர்களே குடும்பத்திற்கு உண்மையாகவே நடவார். குடும்பத்தில் சுகம் இருக்கும். செல்வம் இருக்கும். வயாதாக ஆக சந்தேகமும் குழப்பமும் கூடும். ஏனென்றால் தெரியாமலேயே மனைவி வாரிசுகளிடம் சச்சரவிடுவர்.

### தொழில்

[illegible] வளமும் கலாரசனையும் அறி[illegible]டும் இருப்பதால் கலை சார்ந்த



தொழில்களில் பிரகாசிப்பர். கவிதை, கதை, கட்டுரை, நாவல் எழுதுவர். பத்திரிகை, டெலிவிஷன், வானொலிகளில் இடம்பெறுவர். புத்தகம் எழுதுவர்.

பேச்சளாராக, வக்கீலாக, நகைச்சுவையாக, ஜவுளிக்கடை நடத்துபவராக, வைர வியாபாரியாக, மதுபானக் கடை நடத்துபவராக, ஓட்டல் முதலாளியாக, எல்லாம் இருப்பார். அழகு ஆடம்பரப் பொருள் வாசனைப் பொருள், குளியல் சோப், முதலியவற்றில் சார்ந்த தொழிலில் இருப்பார்.

### நோய்

நீர் உடலில் சேர்வதால் தலையில் கோர்த்துக் கொள்ளுவதாலேற்படும் கோளாறுகள், கை, கால், கழுத்து மூட்டுக்கள் வலி, வாதத் தொடர்பானவை, கபம் தொடர்பானவை, சளி முதலிய தொல்லை, கண் கோளாறு, நீணநீர் கோவை போன்றவை, நீரிழிவு நோய், லேசான மனக் கோளாறு வரலாம்.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

861

## அரசனுக்கு உதவி புரிந்த உத்தமி!

விக்கிரமாதித்தன் என்னும் பெயர் கொண்ட அரசன் பாடலி புத்திர மாநிலத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தான். குதிரைப் படைகளை மிகுதியாக வைத்திருந்த அசுவபதி என்னும் சிற்றரசனும் யானைப் படைகளை அதிகமாக வைத்திருந்த கசபதி என்னும் சிற்றரசனும் விக்கிரமாதித்தனிடம் மிகவும் அன்புடைய நண்பர்களாக இருந்தனர்.

இப்பொழுது பிரதிட்டானம் என்னும் நகரத்தை ஆண்டு கொண்யிடிருந்த நரசிங்கன் என்னும் அரசன் விக்கிரமாதித்தனுக்குப் பகைவனாக இருந்தான். வலிமை மிகுந்த காலாட்படை அவனிடம் சிறந்து விளங்கியது.

நரசிங்கனுடைய படைபலத்தையும் அவனுடைய பகைமையையும் ஒற்றர் மூலம் அறிந்துகொண்டான் விக்கிரமாதித்தன். நரசிங்கனை அடிமையாக்கி என் கோட்டை வாசலில் நிறுத்தி வைப்பேன் என்று ஒருநாள் உறுதிமொழி எடுத்துக் கொண்டான் விக்கிரமாதித்தன். அதற்காக சிற்றரசர்கள் அசுவபதி, கசபதி ஆகியோரின் துணையைக் கொண்டு விக்கிரமாதித்தன் பிரதிட்டானத்தின்மீது படையெடுத்தான்.

நரசிங்கனும் படையைத் திரட்டி விக்கிரமாதித்தனை எதிர்த்துப் போரிட்டான். வெற்றி அவனுக்கே கிடைத்தது. போரில் தோல்வி அடைந்து தன்னுடைய நாட்டுக்குத் திரும்பினான் விக்கிரமாதித்தன்.

வெற்றி பெற்ற நரசிங்கன் புகமுடன் பிரதிட்டானத்துக்குச் சென்றான்.

தன்னுடைய எண்ணம் நிறைவேறாததை நினைத்து விக்கிரமாதித்தன் வருந்தினான். நரசிங்கனை இனிமேல் போரில் வெல்வது கடினம் என்பதை உணர்ந்து தந்திரத்தினால் வெல்ல திட்டம் தீட்டினான்.

நம்பிக்கைக்குரிய அமச்சர்கள் முதலானவர்களிடம் நாட்டை ஒப்படைத்துவிட்டான் விக்கிரமாதித்தன்.

புத்திமான் என்னும் அமைச்சனையும், ஐநூறு சிப்பாய்களையும் அழைத்துக்கொண்டு, யாத்திரைகளைப்போல உடை அணிந்து பிரதிட்டானுக்குச் சென்றான் விக்கிரமாதித்தான்.

அங்கே மதனமாலா என்னும் அழகான தாசி இருந்தாள். அவளுடைய அழகுக்கு நிகராக நல்ல குணமும் இருந்தது. செல்வத்துக்கும் குறைவு இல்லை. அவள் வாழும் மாளிகை அரண்மனைபோல் இருந்தது. அந்த மாளிகையை ஆயிரம் வீரர்கள் ஆயுதம் தாங்கி இரவு பகலாகக் காவல் புரிந்தனர். மதன மாலாவின் மாளிகை ஏழு பகுதிகள் கொண்டது.

ஒரு பகுதியில் குதிரைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன .

அடுத்த பகுதியில் யானைகள் குன்றுகள் போலக் காட்சி அளித்தன.

வேறு ஒரு பகுதியில் ஒட்டகங்கள் நிறைந்திருந்தன.

அதற்கு அடுத்து யுத்த தளவாடங்கள் நிறைந்திருந்தன.

மற்றொரு பகுதியில் கருவூலம் பொன்னும் மணியும் நிரம்பி ஒளி வீசியது.

இன்னொரு பகுதியில் கவிவாணர்களும் புலவர்களும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தனர்.


கடைசிப் பகுதியின் ஆடல் பாடல் வாத்தியங்கள் முழங்கின.

விக்கிரமாதித்தன் குழுவினர் அந்த மாளிகையில் நுழைந்தனர்.

ஒவ்வொரு பகுதியாகப் பார்த்து வியப்புற்று மதனமாலா இருந்த இடத்துக்குச் சென்றனர். மாறு வேடத்தில் வந்துள்ள விக்கிரமாதித்தன் குதிரைப் படையைத் தாண்டிவரும் போது நோய் வாய்ப்பட்டிருந்த குதிரைகள் குணம் அடைந்து விட்டதாக ஒரு காவலாளி வந்து மதனமாலாவிடம் தெரிவித்தான்.

அதைக் கேட்ட மதனமாலா மாறு வேடம் கொண்டிருந்த விக்கிரமாதித்தனின் அபூர்வ சக்தியை அறிந்து வியப்படைந்து அவனைஎதிர்கொண்டு அழைத்து வரவேற்று உபசரித்தான்.

பிறகு அவன் மீது மோகம் பிறந்தது அவளுக்கு.



அடுத்த சில நாட்களில் அவளால் வசீகரிக்கப்பட்டு விக்கிரமாதித்தனுக்கும் அவளிடம் காதல் ஏற்பட்டது. இருவரும் இணைந்து ஒருவரை விட்டு ஒருவர் பிரிய முடியாத நிலை உண்டாயிற்று.

விக்கிரமாதித்தனுக்குச் சிறிதும் மனம் கோணாமல் வேண்டும் அளவு தாராளமாகச் செலவு செய்யலானாள் மதனமாலா.

தன்னிடம் மோகம் கொண்டு தன் மாளிகைக்கு வந்த நரசிங்கனை முன்போல் வரவேற்று உபசரிக்காமல் அவ்வப்போது ஏதேனும் காரணம் கூறி தட்டிக் கழித்து அவனை அனுப்பிவிட்டாள் மதனமாலா.

அவளுடைய உள்ளம் விக்கிரமாதித்தனிடம் முற்றிலும் லயித்திருந்தது.

மதனமாலாவின் மோகத்தில் மூழ்கியிருந்த விக்கிரமாதித்தன் தன்னோடு வந்தவர்களை பாடலிபுத்திரத்திற்குத் திரும்ப அனுப்பிவிட்டான்.

அடுத்து சில நாட்கள் கடந்தன.

விக்கிரமாதித்தன் ஊருக்கு புறப்பட எண்ணியிருப்பதை மதனமாலாவிடம் கூறினான்.

அவள் அவனைப் பிரிய வேண்டிய நிலை வந்ததே என்று நினைத்து வருந்தினாள்.

மறுநாள் காலை விக்கிரமாதித்தன் காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு அருகில் இருந்த கோயிலுக்குச் சென்றான். அங்கே குபேரனைப் பிரார்த்தனை செய்தான் விக்கிரமாதித்தன். குபேரன் காட்சி அழித்தார். என்றும் அழியாத ஐந்து தங்கப் பதுமைகளை எனக்கு வழங்க வேண்டும் என்று அவற்றில் எந்தப் பாகம் சிதைந்தாலும் கூட தானாகவே அது வளர்ந்துவிட வேண்டும் என்று கோரினான்.

குபேரனும் அவன் கோரிக்கையை நிறைவேற்றிவிட்டு மறைந்தார்.

அப்பொழுதே அவன் முன் ஐந்து தங்கப் பதுமைகள் வந்து நின்று கொண்டிருந்தன.

அவற்றைக் கண்டு இவை மதனமாலாவுக்கு ஏற்ற பரிசுதான் என்று உள்ளம் பூரித்தான் விக்கிரமாதித்தன்.

பதுமைகளை அங்கேயே விட்டு விட்டு விக்கிரமாதித்தன் தன் நாட்டுக்குப் புறப்பட்டுப் போனான்.

கோயிலுக்கு சென்ற விக்கிரமாதித்தன் வெகு நேரமாகியும் திரும்பி வரவில்லையே என்று எண்ணிய மதனமாலா கோயிலுக்குச் சென்றாள். ஆனால் அங்கே அழகான தங்கப் பதுமைகளைக் கண்டாள். ஆனால் விக்கிரமாதித்தனை காணவில்லை!

அன்புக்கு உரியவனே அவரே போய்விட்ட பின் இந்தப் பதுமைகள் எனக்கு எதற்கு? என்று வெறுப்போடு மதனமாலா தன் மாளிகையை அடைந்தாள்.

ஏவலார்களை அனுப்பி காதலனைத் தேடச் சொன்னாள். எங்கு தேடியும் விக்கிரமாதித்தனைக் காணாமையால் ஏவலாளர்கள் மௌனமாக வந்தார்கள்.

சோக உருவானாள் மதனாலா. தன் காதலன் வருகைக்காக ஆறு மாதம் வரை காத்திருந்து........

-தொடரும்-

---

07.2014
14

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1223 - எட்டாம் லூயி பிரான்சின் மன்னனாக முடி சூடினான்.
- 1789 - பிரெஞ்சுப் புரட்சி: பாரிஸ் மக்கள் பாஸ்டில் சிறையைத் தகர்த்து சிறைக் கைதிகளை விடுவித்து இராணுவத் தளபாடங்களைக் கைப்பற்றினர்.
- 1889 - பாரிசில் கூடிய சோசலிசத் தொழிலாளர்களின் "சர்வதேச தொழிலாளர் பாராளுமன்ற" நிகழ்வுகளில் பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் உட்பட 18 நாடுகளிலிருந்து 400 பிரதிநிதிகள் பங்கேற்றனர். கார்ல் மார்க்ஸ் வலியுறுத்திய 8 மணி வேலை நேரப் போராட்டத்தை முன்னெடுத் துச் செல்வது என முடிவாகியது.
- 1933 - ஜேர்மனியில் நாசிக் கட்சி தவிர்த்து அனைத்து அரசியற் கட்சிகளும் தடை செய்யப்புட்டன.
- 1948 - இத்தாலியின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பல்மீரோ டொக்ளியாட்டி பாராளுமன்றத்துக்கு முன்னர் சுடப்பட்டார்.
- 1958 - ஈராக்கியப் புரட்சி: ஈராக்கில் மன்னராட்சி முடிவுக்கு வந்தது. அப்துல் கரீம் காசிம் நாட்டின் புதிய தலைவரானார்.
- 1965 - மரைனர் 4 செவ்வாய்க் கோளுக்குக் கிட்டவாகச் சென்று முதற்தடவையாக வேறொரு கோளின் மிக அண்மையான படங்களைப் பூமிக்கு அனுப்பியது.
- 1967 - நாசாவின் சேர்வெயர் 4 ஆளில்லா விண்கலம் ஏவப்பட்டது.
- 1989 - பிரெஞ்சுப் புரட்சியின் 200 ஆவது ஆண்டு நிறைவை பிரான்ஸ் கொண்டாடியது.
- 1995 - எம்பி3 பெயரிடப்பட்டது.
- 1995 - இலங்கை இராணுவத்தினரின் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் புக்காரா ரக விமானம் ஒன்று சுட்டு வீழ்த்தப்பட்டது.
- 1997 - சேகுவேராவினதும் தோழர்களதும் உடல் எச்சங்கள் கியூபா வந்தடைந்தன.
- 2002 - பாஸ்டில் நாள் நிகழ்வுகளில் கலந்து கொண்ட பிரெஞ்சு ஜனாதிபதி ஜாக் சிராக் கொலை முயற்சி ஒன்றிலிருந்து உயிர் தப்பினார்.
- 2007 - ஐரோப்பாவில் மரபுவழி இராணுவப் படைகள் குறித்த உடன்பாட்டிலிருந்து ரஷ்யா விலகியது.

### பிறப்புகள்

- 1929 - வா. செ. குழந்தைசாமி, இந்தியப் பொறியியல் அறிஞர்.
- 1943 - ரோகண விஜயவீர, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர், புரட்சியாளர் (இ. 1989)

### இறப்புகள்

- 1827 - அகஸ்டீன்-ஜீன் ஃபிரெனெல், பிரெஞ்சு இயற்பியலாளர் (பி. 1788)
- 1998 - டிக் மக்டொனால்ட், மக்டொனால்ட் நிறுவன தாபகர் (பி. 1909)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் போராட்டத்தை நிராகரிக்கின்றோம்

## யாழ்.மாவட்ட மீனவ பிரதிநிதிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஆர்ப்பாட்ட போராட்டத்தை, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்கள சகலரும் நிராகரிப்பதாக ஈ.பி.டி.பியின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமாகாண கடற்றொழிலாளர்களின் இணையத்தின் தலைவர் கந்தவனம் சூரியகுமாரன், யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை, யாழ். மாவட்ட கடற்றொழிலாளர்களின் கூட்டுறவுச்சங்க சமாசங்களின் தலைவர் வைத்திப்பிள்ளை இக்னேஸ் அருள்தாஸ் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கையில் நாளை செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருக்கும் எதிர்ப்புப் போராட்டமானது மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளையும் குறிப்பிட்டு அரசுக்கு எதிரான அரசியல் நோக்கத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி ஆர்ப்பாட்டமானது, இருக்கின்ற பிரச்சினைகளை மேலும் நெருக்கடிக்குள் தள்ளி விடுவதாகவுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொள்வதாக குறிப்பிடப்பட்டிருக்கும் அரசியல் கட்சிகளுக்குள்ளும் பொதுவான பங்களிப்பு குறிப்பிடப்படவில்லை. இவற்றைப் பார்க்கும் போது, யாழ்ப்பாண மக்களின் பெயரால், தென் இலங்கையிலிருந்து முகமறியாதவர்களை இங்கே அழைத்து வந்து மேற்படி ஆர்ப்பாட்டத்தை நடத்தி, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் சுயநலன்களை அடைந்து கொள்ளவே முயற்சிக்கப்படுகின்றது.

ஆகவே, யாருடைய சுய இலாபத்துக்காகவும் எம்மை பகடைக்காய்களாக பயன்படுத்திக் கொள்ள நாம் அனுமதிக்கப் போவதில்லை.

எனவே நாளை நடை பெறவுள்ளதாக தெரிவிக்கப்படும் ஆர்ப்பாட்ட போராட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

எமது தொழில் சார்ந்த பிரச்சினைகள், எரிபொருள் மானியப் பிரச்சினை, இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள், பூர்வீக இடங்களில் மீன்பிடி போன்ற பல்வேறு பிரச்சினை தீர்ப்பதற்கு அரசுடன் சாதகமான முயற்சிகளை மேற் கொண்டு வரும் இவ்வேளையில் எமது பிரச்சினைகளை தீராப்பிரச்சினைகளாக வைத்திருந்து, அரசியல் இலாபம் பெற்றுக்கொள்ளவே ஆர்ப்பாட்டப் போராட்டத்தை ஏற்பாடு செய்த அமைப்புகள் விரும்புகின்றன.

எனவே நாங்கள் கூட்டாக மேற்படி ஆர்ப்பாட்ட போராட்டத்தை நிராகரிக்கின்றோம் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

# கே.பியின் நிறுவனத்தை உடன் தடை செய்யுங்கள்!

## ரணில் வலியுறுத்து



(கொழும்பு)

புலிகளின் ஆயுத விநியோகதாரியான கே.பி.யால் நடத்தப்பட்டு வரும், அரச சார்பற்ற நிறுவனத்தை உடனடியாகத் தடை செய்ய அரசு நடவடிக்கையெடுக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள உத்தரவு தொடர்பில் விசேட அறிக்கையொன்றை விடுத்த பிரதமரிடம் கேள்விகளை எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த பிரதமர் டி.எம். ஜயரட்ன அரச சார்பற்ற நிறுவனங்கள் சில தமது விடய பரப்புகளை மீறிச் செயற்படுவதாகவும் சில அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆயுத விநியோகத்தில் கூட ஈடுபட்டதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதன்போதே புலிகளின் ஆயுத விநியோகதாரியான கே.பி.யினால் நடத்தப்படும் அரச சார்பற்ற நிறுவனத்தை உடனடியாக அரசு தடை செய்ய வேண்டுமென வலியுறுத்திய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறுகையில்,

சில அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது விடயப் பரப்புகளை மீறிச் செயற்படுவதாகவும் ஆயுத விநியோகங்களில் ஈடுபட்டதாகவும் பிரதமர் கூறியதுடன் அதனால் தான் சில அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

அப்படியானால் புலிகளுக்கு ஆயுத விநியோகதாரியாகச் செயற்பட்ட கே.பி. அரச சார்பற்ற நிறுவனமொன்றை நடத்த அரசு எப்படி அனுமதி வழங்கியுள்ளது? கே.பி. நடத்தும் அரச சார்பற்ற நிறுவனத்தை அரசு உடனடியாக தடை செய்ய வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் மீதான தனது பிடியை இறுக்கி வரும் அரசு எந்த அடிப்படையில் புலிகளின் ஆயுத விநியோகதாரியான கே.பி.க்கு அரச சார்பற்ற நிறுவனத்தை நடத்துவதற்கான அனுமதியை வழங்கியதெனக் கூற வேண்டும் என்றார். (அ)

# இலங்கை எதேச்சதிகார சமூகமாக மாறி வருகிறது

## சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

யுத்தத்திற்கு பிந்திய இலங்கை மிக வேகமாக இராணுவ மற்றும் எதேச்சதிகார சமூகமாக மாறி வருவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அரசசார்பற்ற அமைப்புகளுக்கான செயலகம், விடுத்துள்ள செய்திக்குறிப்பு, அடிப்படை உரிமைகளை அப்பட்டமாக மீறும் நடவடிக்கை எனத் தெரிவித்துள்ள சட்டத்தரணிகள் சங்கம், இந்த சுற்று நிருபத்தை உடனடியாக அதிகாரிகள் இரத்துச் செய்ய வேண்டும் எனக் கோரியுள்ளது.

குறிப்பிட்டஉத்தரவு இலங்கையின் சுதந்திர மற்றும் ஜனநாயக சமூகம் மீது கடும் பாதிப்புகளை ஏற்படுத்தலாம் எனவும் கவலை வெளியிட்டுள்ள சட்டத்தரணிகள் சங்கம் யுத்தத்திற்கு பிந்திய இலங்கை மிக வேகமாக இராணுவ மற்றும் எதேச்சதிகார சமூகமாக மாறி வருகிறது எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக ச்ர்வதேச இராணுவச் சுட்டியின் படி பிராந்தியத்தில் இலங்கையே அதிகளவுக்கு இராணுவ மயப்படுத்தப்பட்ட நாடாக விளங்குகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# 60 புலிகளுக்கு ஐ.நா.சபை அ.அட்டை வழங்கியுள்ளது

மலேசியாவில் உள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகராலயம் விடுதலைப் புலிகளின் குண்டுதாரிகள் மற்றும் ஏனைய கடும் குற்றவாளிகள் 60 பேருக்கு அகதி அடையாள அட்டைகளை வழங்கியுள்ளதாக திவயின தெரிவித்துள்ளது.

இது தொடர்பான தகவல்கள் நாட்டின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்துள்ளதுடன் மலேசிய பயங்கரவாத தடுப்பு பிரிவு பொலிஸாரும் இந்த தகவல்களை வழங்கியுள்ளனர்.

பயணிகள் விமானங்கள், கடற்படை கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள், பயணிகள் பேருந்துகள் மீது குண்டு தாக்குதல்களை நடத்திய மற்றும் பொதுமக்களை கொலை செய்த புலிகளின் உறுப்பினர்களும் இதில் அடங்குவதாக அதில் குறிப் பிடப்பட்டுள்ளது.

அதேவேளை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை கொலை செய்ய முயற்சித்த புலிகளின் குண்டுதாரி ஒருவரை, அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் எதிர்ப்பையும் மீறி இலங்கையிடம் கையளிக்க மலேசிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# இன்று ஒரு தகவல்

## வரம்

பத்மாசுரன் என்ற அரக்கன் இருந்தான். அவன் மிகுந்த வலிமை படைத்தவன்.

அவன் முனிவர்களுக்கெல்லாம் இடையூறுகள் செய்து வந்தான்.

இந்த விடயத்தைக் கேள்விப்பட்ட நாரதர் அவனிடம் வந்தார்.

"என்னப்பா? எப்படி இருக்கிறாய்?" என்று விசாரித்தார்.

"உம்மை மாதிரி சாதுவாக இருந்து விட்டால் ஒரு கஷ்டமும் இல்லை. என்னை மாதிரி இருப்பதால் ஏகப்பட்ட கஷ்டம்! எங்களுக்கு எவருமே மரியாதை கொடுப்பதில்லை. எங்களை அழித்துவிட வேண்டும் என்றே நினைக்கிறார்கள்" என்று குறைப்பட்டுக் கொண்டான்.

உடனே நாரதர் அதற்கு ஒரு வழி சொன்னார்.

"கவலைப்படாதே! சிவனை நினைத்து தவம் செய்! உடனே அவர் வந்து விடுவார். என்ன வரம் வேண்டும் என்று கேட்பார். ஏதாவது ஒரு வரம் கேள்! அதன் பின் உனக்கு மரியாதை அதிகமாகும்!" என்றார்.

"என்னவரம் கேட்கலாம்?" என்றான் அவன்.

"எதிரிகளெல்லாம் உன்னைக் கண்டு பயப்பட வேண்டும். அவ்வளவு ஏன் சிவனே உன்னைக் கண்டு பயப்பட வேண்டும். அதுமாதிரி ஒரு வரம் கேட்டு வாங்கிக் கொள்!" என்றார் நாரதர்.

"எப்படியான வரம் வாங்கினால் எல்லோரும் பயப்படுவார்கள்?" என்று கேட்டான்.

"அதாவது... உன் கையை யாருடைய தலையில் வைத்தாலும் அவர் உடனே எரிந்து சாம்பலாகிவிட வேண்டும்! அப்படி ஏதாவது வரத்தை வாங்கி விடு!" என்றார்.

சரி என்று சொல்லிவிட்டு உடனே புறப்பட்டு போனான். கடுமையான தவம் இருந்தான். சிவபெருமான் முன்னால் வந்து நின்றார்.

"பத்மாசுரா! உன் தவத்தை மெச்சினேன்! என்ன வரம் வேண்டும் கேள்!" என்றார்.

"நான் யார் தலையில் கையை வைத்தாலும் அவர் எரிந்து சாம்பலாக வேண்டும்!" என்றான்.

அவரும் அப்படியே வரம் கொடுத்தார்.

பத்மாசுரன் நடந்து வந்து கொண்டிருந்தான். வழியில் நாரதரைக் கண்டு விடயத்தைச் சொன்னான். "அதுசரி! அவர் நிஜமாகவே வரம் கொடுத்தாரா? அதை நீ சோதித்துப் பார்த்தாயா?" என்று கேட்டார் நாரதர்.

"நீங்கள்தான் உதவி செய்ய வேண்டும். உங்கள் தலையை கொஞ்சம் காட்டுங்களேன்!" என்றான்.

நாரதர் எடுத்தார் ஓட்டம்.

இருந்தாலும் ஒரு யோசனையை சொல்லிவிட்டு ஓடினார்.

"என்னை சாம்பலாக்கி விட்டாயானால் அதற்குப்பின் உனக்கு யோசனை சொல்வதற்கு ஆள் இருக்காது. அதனால் உனக்கு வரம் கொடுத்தவரின் தலையிலேயே கையைவைத்துப்பார்! பலிக்கவில்லை என்றால் அவரையே பிடிக்கலாம்!" என்றார்.

அவனும் சிவனைத் தேடிக் கொண்டு புறப்பட்டான்.

நாரதர் ஓடி வந்து திருமாலிடம் விடயத்தைக் கூறினார்.

உடனே திருமால் சிவனிடம் ஓடினார். அங்கு அவரை பத்மாசுரன் துரத்திக் கொண்டிருந்தான்.

திருமால் அழகிய மோகினி உருவம் எடுத்தார். பத்மாசுரன் மோகினியின் அருகில் வந்து "என்னை கல்யாணம் பண்ணிக் கொள்" என்றான்.

"சரி பண்ணிக் கொள்கிறேன்! அதற்கு முதல்போய் குளித்து விட்டு எண்ணெய் தடவி சீவிக் கொண்டு வா!" என்றது மோகினி.

பத்மாசுரன் குளிப்பதற்கு ஆற்றில் இறங்கினான். தலையை தேய்ப்பதற்காக கையை தலையில் வைத்தான். அவ்வளவு தான்!

அவன் எரிந்து சாம்பலாகி விட்டான். அதன்பின் எல்லோரும் நிம்மதியாக இருந்தார்கள்.

வரம் கொடுத்துவிட்டு மாட்டிக் கொண்டால் இப்படித்தான் தப்பித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அவசரப்பட்டு வரம் கொடுப்பதும் தவறு! வாக்குக் கொடுப்பதும் தவறு! எப்பொழுதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

அன்றைக்கு அப்படித்தான் ஒருவர் என்னிடம் வந்தார்.

"மனித நேயம் என்றால் என்ன?" என்றார்.

"ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கிறது" என்றேன்.

"அப்படியானால் ஒரு 50 ரூபா கைமாறாக கொடுங்க" என்று கேட்டான்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விசாரணை இலக்குக்குப் பலமான எதிர்ப்பு நகர்வுகள்





ஐ.நா.விசாரணை என்பது இலங்கைக்குள் சென்று தான் அவைகளை ஒப்பேற்ற வேண்டும் என்பதற்கு அப்பால் கைவசமுள்ள சாட்சியங்களைக் கோவைப் படுத்துவது என்பதிலேயே முழுமையாகத் தங்கியுள்ளது.

உள்நாட்டு விவகாரத்தில் வெளிநாடு எதுவும் தலையிட முடியாது என்று வெளியில் சொன்னாலும், சர்வதேச நியதிகளின்படி வெளித் தலையீட்டுக்கு இடமுண்டு என்பது அவர்களுக்குத் தெரியும்.

அதனால்தான், அடுத்து என்ன நடைபெறும்? என்ற கேள்வி உள்வட்டாரங்களில் வீச்சாக எழுந்துள்ளது.

ஜெனிவாக் குழுவின் விசாரணை ஆரம்பமாவதற்கு முன்னரே, பலத்த காற்றும் இடி முழக்கமும் மின்னலுடன் சேர்ந்து பின்னால் வருவது மழை என்பதை உணர்த்த ஆரம்பித்துள்ளன.

இதன் எதிரொலியை அண்மையில் நடைபெற்ற இலங்கை அரசின் ஆளும் கட்சிக் கூட்டத்தில் காண முடிந்தது.

இந்தக் கூட்டம் பிரசித்தி பெற்ற பேருவளையில் நடைபெற்றது. வழக்கமாக அலரி மாளிகையில் நடைபெறும் இக்கூட்டம் பேருவளைக்கு மாற்றப்பட்டதற்கு ஒரு முக்கிய காரணமுண்டு.

அளுத்கம மற்றும் பேருவளை ஆகிய முஸ்லிம் பட்டினங்களில் சில வாரங்களுக்கு முன்னர் முஸ்லிகள் மீது சிங்கள- பௌத்த மதவாதிகள் நடத்திய வெறியாட்டம் அனைவரும் அறிந்ததே.

இதன் மூலகர்த்தாக்களான பொதுபலசேனா பிக்குகள் இன்னமும் சுதந்திரமாக வீதிகளில் நடமாடிக் கொண்டிருக்கையில், பாதிக்கப்பட்ட முஸ்லிகளுக்கு எந்த நியாயமும் இது வரை கிடைக்கவில்லை.

இப்படியான பின்னணியில், பேருவளையில் எதுவுமே நடைபெறவில்லை. எல்லாம் சகஜ நிலையில் உள்ளன என்று சர்வதேசத்துக்குக் காட்டவே இக்கூட்டத்தை பேருவளையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நடத்தினார் என்பது பரம இரகசியம்.

ஆனால், இந்தக் கூட்டத்தில் தமது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்படியான கேள்விகளை எழுப்புவார்கள் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச நினைத்திருக்கவில்லை.

ஜெனிவா விசாரணையின் பிரதிபலிப்பாக இலங்கை மீது மிகக் கடுமையான பொருளாதாரத் தடை விதிக்கப்படுமா என்பது முதற் கேள்வியாகவும் இலங்கை விவகாரம் ஐ.நாவின் பாதுகாப்புச் சபைக்குக் கொண்டு செல்லப்படுமா என்பது இரண்டாவது கேள்வியாகவும் பலராலும் எழுப்பப்பட்டதை இலங்கை அரசு சற்றும் எதிர்பார்க்கவில்லை.

ஜெனிவா விசாரணைக் குழுவை இலங்கைக்குள் அனுமதிக்க தாம் மறுப்பதன் காரணமாகவே இப்படியெல்லாம் நடக்குமா? என்று தமது கட்சி உறுப்பினர்களே நினைக்கிறார்கள் என்பதை இக்கேள்விகளினூடாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உணர்ந்து கொண்டார். இதன் வெளிப்பாடாக, தமது கட்சியினர் மீது அவர் பாய்ந்து, பொரிந்து தள்ளியதாக இடதுசாரியினர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பொருளாதாரத் தடை, பாதுகாப்புச் சபை விசாரணை என்று சூடாக விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க வேண்டுமென மூத்த இடதுசாரி அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கோரினார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச இதற்குப் பதிலளிக்க முன்னராக சில அமைச்சர்கள் அதற்கு இது பொருத்தமான நேரமல்ல என்று பதிலளித்தனர். அப்படியானால் பொருத்தமான நேரம் எது? என்று நல்ல வேளை வாசுதேச நாணயக்கார பதில்க் கேள்வியை முன்வைக்கவில்லை.

இது ஒருபுறமிருக்க, முஸ்லிம்கள் மீதான தாக்குதல் நடவடிக்கையைக் கண்டிப்பதாக சர்வதேச நிலைப்பாட்டினை விளக்கும் சில அறிக்கைகள் வந்துள்ளன. ஐ.நா. சபையின் மூன்று நிபுணர்கள் கொண்ட குழு முதற்கட்ட அறிக்கையை விடுத்துள்ளது.

இலங்கையில் இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக கடும்போக்கு பௌத்த மக்களால் வன்முறைகள் மேற்கொள்ளப்படுவதைச் சுட்டிக்காட்டி இவர்கள் வேண்டியுள்ளனர்.

இது தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கையில் இஸ்லாமிய மக்களுக்கெதிராக 350 தாக்குதல் சம்பவங்களும், கிறிஸ்தவ மக்களுக்கெதிராக 150 தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றம் இழைத்துவிட்டு, தப்பிவிடலாம் என்று பௌத்த மதவாதிகளிடையே காணப்படும் அரசியல் பாதுகாப்புச் சூழலே அங்கு சிறுபான்மையினருக்கெதிராக வன்முறைத் தாக்குதல்களைத் தூண்டுகிறது என்று ஐ.நா. நிபுணர்கள் விளங்கும் மொழியில் சாடியுள்ளனர்.

சர்வதேச சுயாதீன விசாரணைக் குழுவின் முன்னால் பொதுமக்கள் சாட்சியமளிப்பதைத் தடுப்பதற்குப் பல வழிமுறைகளை இலங்கை அரசு கையாள ஆரம்பித்துள்ளது. சாட்சியமளிப்பவர்கள் உள்நாட்டுச் சட்டங்களுக்கு அமைய தண்டிக்கப்படுவர் என்ற எச்சரிக்கை ஏற்கனவே விடுக்கப்பட்டது.

ஸ்கைப், மின்னஞ்சல்கள் போன்ற நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி சாட்சியமளிப்பதற்கும் இலங்கை அரசு இப்போது தடை விதித்துள்ளது.

ஐ.நா. விசாரணைக் குழுவுடன் தொடர்புகொள்ளவிடாது, இலங்கை அரசு தடுக்க நினைத்தால், அது இலங்கை அரசுக்கே பாதகமாக அமையும் என விசாரணைக் குழுவின் நிபுணர்களில் ஒருவரான பாகிஸ்தானியப் பெண்மணி அஸ்மா ஜவாங்கிர் தெரிவித்துள்ளார்.

யார் என்ன சொன்னாலும், ஐ.நா. தீர்மானங்களையும் விசாரணைச் செயற்பாடுகளையும் உள்நாட்டு அரசியலில் தமக்குச் சாதகமாக்க முனையும் இலங்கை அரசு, அதனை மையப்படுத்தி விரைவாக சில தேர்தல்களை நடத்த ஆலோசிக்கிறது.

இது சாதகமாக அமையாத பட்சத்தில் தற்போதைய பதவிக் காலத்தை மேலும் சில வருடங்கள் நீடிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தவும் அரச தரப்பினர் ஆராய்ந்து வருகின்றனர்.

இதற்கிடையில் தென்னாபிரிக்க உபஜனாதிபதி சிறில் ரமபோச மற்றும் ஆஸ்திரேலிய குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிசன் ஆகியோரின் இலங்கைப் பயணம் பல்வேறுபட்ட கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது.

அரசாங்க மற்றும் தமிழர் தரப்பினரை சிறில் ரமபோச சந்தித்துவிட்டு நாடு திரும்பிய பின்னர், இலங்கைப் பிரச்சினையில் தென்னாபிரிக்கா மத்தியஸ்தம் வகிக்காது என்று இலங்கை அரசு அறிவிக்க, தனது முயற்சிகள் ஜெனிவா விசாரணைக்கும் இந்தியாவின் நடவடிக்கைகளுக்கும் பாதகமாக இருக்காதென்று சிறில் ரமபோச தெரிவித்துள்ளார்.

இரண்டு அறிவிப்புகளுக்கும் இடையில் பிரிந்திருக்கும் மூல அர்த்தத்தை இப்போது புரிந்துகொள்ள முடியவில்லை.

கொழும்பில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலர் ஆகியோரைச் சந்தித்த ஆஸ்திரேலிய அமைச்சர், யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்தாராயினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்திக்கவில்லை.

இலங்கை அகதிகளை நடுக்கடலில் வைத்துப்பிடித்து இலங்கை அரசிடம் கையளிக்கும் ஆஸ்திரேலிய அரசின் பிரதிநிதியின் இவ்விஜயம் பல கேள்விகளை எழுப்பி நிற்கின்றது.

சர்வதேச விசாரணையை பகிரங்கமாக ஆரம்பிப்பதற்கு முன்னரே போர்க் குற்ற மற்றும் இனப்படுகொலைச் செயற்பாடுகள் தொடர்பான போதிய தரவுகளையும், நம்பகமான ஆவணங்களையும் உறுதியான ஆதாரங்களையும் நிபுணர் குழு பெற்றுவிட்டதென்பது இலங்கை அரசு நம்ப முடியாத உண்மை.

ஐ.நா.விசாரணை என்பது இலங்கைக்குள் சென்று தான் அவைகளை ஒப்பேற்ற வேண்டும் என்பதற்கு அப்பால், கைவசமுள்ள சாட்சியங்களைக் கோவைப்படுத்துவது என்பதிலேயே முழுமையாகத் தங்கியுள்ளது.

இந்த விசாரணை இறுதி அறிக்கையின் தாக்கம் மகிந்த இலங்கை அரசை ஆட்சியின்போது அதன் பின்னரும் நிழல் போன்று தொடர்ந்து கொண்டே இருக்கப் போகின்றது.

-பனங்காட்டான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுநர் நியமனத்தில்கூட விட்டுக்கொடுக்காத அரசாங்கம் தமிழர் பிரச்சினையை தீர்க்குமா?

## மங்கள எம்.பி. கேள்வி

(கொழும்பு)

வடமாகாணத்துக்கு சிவிலியன் ஒருவரை ஆளுநராக நியமிக்காமல் மீண்டும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியை ஆளுநராக்கியதன் மூலம் தமிழர் பிரச்சினையினை தீர்ப்பதற்கு இந்த அரசாங்கம் துளியளவும் விரும்பவில்லையென்பதை தெட்டத் தெளிவாக்கியுள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளானது இனங்களுக்கிடையில் ஒரு போதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தாது மாறாக மேலும் மேலும் குரோதத்தையும் இன முரண்பாடுகளையுமே தோற்றுவிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியை மீண்டும் ஆளுநராக்கியமை தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி தேசிய பிரச்சினையினை தீர்ப்பதற்கான நல்லதொரு சந்தர்ப்பம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கிடைத்தது.

இது போன்ற சந்தர்ப்பம் இலங்கையின் அரசியல் வரலாற்றில் வேறு எந்த அரசியல் தலைவருக்கும் கிடைக்கவில்லை.

யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்கள் கடந்துள்ளன. ஆனால் இன்னும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் மனங்களை வெற்றிகொள்ளும் வகையிலான வேலைத்திட்டங்களை அரசாங்கம் இது வரையில் மேற்கொள்ளவில்லை. மாறாக அம்மக்களின் மனங்களை புண்படுத்தும் செயற்பாடுகளையே மேற்கொண்டு வருகிறது.

வடக்கில் அளவுக்கு அதிகமாகவுள்ள இராணுவத்தினரை வெளியேற்றி விட்டு அங்கு சிவிலியன் ஒருவரை ஆளுநராக நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கை தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்த நிலையில் அதனையெல்லாம் பொருட்படுத்தாமல் தாம் நினைப்பதைத் தான் செய்வோம் என்பதை இந்த அரசாங்கம் நிரூபித்துள்ளது.

சாதாரணமான ஒரு ஆளுநர் நியமன விடயத்தில் விட்டுக் கொடுக்காத இந்த அரசாங்கம் தமிழர்கள் பிரச்சினையை எப்படி தீர்த்து வைக்கப்போகிறது.


எனவே தேசிய பிரச்சினைகளை தீர்க்கும் எண்ணம் இல்லை என்பதை தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளது.

சர்வதேச அழுத்தங்கள் உச்சத்தில் இருக்கும் இத்தருணத்தில் அரசாங்கம் மேற்கொண்டுவரும் இவ்வாறான செயற்பாடுகளானது மேலும் மேலும் சிக்கலான நிலைமையினையே தோற்றுவிக்கும்.

அது மாத்திரமல்லாமல் உள்நாட்டிலும் குழப்பங்களும் அமைதியின்மையுமே ஏற்படும்.



அரசாங்கத்தின் ஜனநாயக விரோத செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவந்து நாட்டில் மீண்டும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்கு இனமத மற்றும் மொழி வேறுபாடுகளை மறந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)



ஆரியகுளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தில் பத்து தினங்கள் வாழ்வியலில் பெரியபுராணம் எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றிய சமுர்த்தி உதவி முகாமையாளர் த.கருணாகரனுக்கு சொல்வேந்தன் எனும் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டதைப் படத்தில் காணலாம்.

# அமிர்தலிங்கத்தின் காலத்தில்கூட தமிழீழம் என்ற கருத்தை ஏற்கவில்லை

## சம்பந்தன் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையின் மூத்த தமிழ் அரசியல் தலைவர்களில் ஒருவரான அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் 1989 ஆம் ஆண்டு ஜூலை 13 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

அவரது கொலையை அன்று கண்டித்திருந்தால் பலர் பாதிக்கப் படைந்திருக்கலாம் என்ற காரணத்தினாலேயே தமிழ் அரசியல் தரப்பில் அவரது இழப்பு குறித்து மௌனம் நிலவியிருக்கலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அமிர்தலிங்கத்தின் மறைவு தமிழர்களுக்கும் தமிழர் போராட்டத்திற்கு பெரும் இழப்பு. அமிர்தலிங்கம் அண்ணனின் காலத்தில் கூட தமிழீழம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்திலிருந்து நாங்கள் மாறியிருந்தோம்.

தமிழ் பேசும் மக்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்துவந்த வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் போதியளவு சுயாட்சியுடன் அரசியல் தீர்வுத் திட்டம் கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே எமது அரசியல் தலைமைகள் இயங்கிவந்தன.

அந்த அடிப்படையில் தான் இந்திய இலங்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டது. 13 ஆம் அரசியல் சாசனத் திருத்தம் ஏற்பட்டது. அதை முழுமையான தீர்வாக நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் அது ஆரம்பத்தில் எடுக்கப்பட்ட ஒரு படி என்பதையும் நாங்கள் உதாசீனம் செய்யமுடியாது.

ஆரம்பத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியில் 1956 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவான அமிர்தலிங்கம், 1972 ஆம் ஆண்டில் தமிழ்க் கட்சிகளுடன் கூட்டணி அமைத்து, 1977 ஆம் ஆணடு பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் வெற்றி பெற்று ஏதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்றிருந்தார். (அ)

# மனைவியை கொன்று புதைத்த கணவன் பொலிஸாரிடம் சரண்

மனைவியைக் கொலை செய்து வீட்டின் பின்புறத்தில் புதைத்த கணவர் ஒருவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

காலி பிரதேசத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மனைவிக்கு வேறொரு நபருடன் தொடர்பு இருப்பதாக சந்தேகித்து, மனைவியை குறித்த நபர் கொலை செய்துள்ளார்.

மிகக் கொடூரமான முறையில் தாக்கி மனைவியைக் கொலை செய்து, வீட்டின் பின்புறத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடமொன்றின் அத்திவாரத்திற்கு அருகாமையில் புதைத்துள்ளார்.

பத்து நாட்களுக்கு முன்னதாக குறித்த நபர் மனைவியைக் கொன்று புதைத்துள்ளார். சம்பவம் தொடர்பில் மனத்தளவில் பாதிக்கப்பட்ட சந்தேக நபர் பள்ளிவாசலின் பிரதம குருவிடம் கொலை பற்றி கூறியுள்ளார்.

பிரதம குருவின் அறிவுறுத்தலுக்கு அமைய சந்தேக நபர் காலி பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சடலம் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து நீதவான் முன்னிலையில் தோண்டி எடுக்கப்பட்டது. (அ)

# 10 முக்கிய வரவுத்திட்டங்களுடன் அரசியலில் மீண்டும் சந்திரிகா?

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 10 முக்கிய வரைவுத் திட்டங்களின் அடிப்படையில் அரசியலில் மீண்டும் பிரவேசிக்க உள்ளதாக கொழும்பில் வெளியாகும் ஊடகம் ஒனறு தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி தனது முடிவை விரைவில் அறிவிக்க உள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவாரா, இல்லையா என்பது இன்னும் தெளிவாகவில்லை.

அவர் இந்த விடயங்கள் குறித்து இரண்டு கட்சிகளையும் சேர்ந்த அரசியல்வாதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அத்துடன் மேற்படி கொள்கை வரைவு திட்டம் தொடர்பாக அவர், இன்றைய ஆட்சியாளர்கள் தொடர்பில் அதிருப்தி கொண்டுள்ள அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்கள் சிலருடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களும் முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவே ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிடுவார் என ஏற்கனவே அறிவித்துள்ளது.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக முன்னாள் ஜனாதிபதி அரசியலுக்கு மீண்டும் வரும் வாய்ப்புகள் குறைவு.

எவ்வாறாயினும், பல அரசியல் கடசிகளின் ஆதரவுடன் முன்னாள் ஜனாதிபதி மூன்றாவது வேட்பாளராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வாய்ப்புகள் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ)

# ஐக்கிய அரபு இராச்சியத்துடன் அரசாங்கம் அவசரமாக பேசும்

(கொழும்பு)

ஐக்கிய அரபு இராச்சியத்தின் தொழில் அமைச்சர் மற்றும் குழுவினருடன் அவசர பேச்சுவார்த்தை ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இலங்கைக்கும் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும் இடையில் பணியாட்களை வேலைக்கு அனுப்புவது தொடர்பாக ஏற்பட்டுள்ள முறுகலை அடுத்தே இந்த பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த உடன்படிக்கையில் உள்ள சில விடயங்களை இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைய நடைமுறைப்படுத்த முடியாமை காரணமாக இந்த முறுகல் ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக பணியாட்களை அனுப்புவதில் தடைகள் ஏற்பட்டுள்ளன.

இதற்கிடையில் உடன்படிக்கையில் இந்த ஏற்றுக்கொள்ள முடியாத அம்சங்கள் என்ன என்பது வெளியிடப்படவில்லை.

எனினும் ஏற்கனவே இரண்டு நாடுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை உறுதியாக கடைப்பிடிக்கப்பட்டதாக இலங்கை தெரிவித்துள்ளது. (அ)

# நாணயத் தாள்களை கடத்த முயன்றவர் கைது

வெளிநாட்டு நாணயத்தாள்களை கடத்த முயன்ற குற்றச் சாட்டில் இலங்கையரொருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார்.

கொழும்பிற்குச் செல்வதற்காக சென்னை விமான நிலையத்துக்கு வந்திருந்த மேற்படி நபரை, அங்கிருந்த அதிகாரிகள் சோதனையிட்டனர்.

அப்போது அவர் கொண்டு வந்திருந்த பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2 கோடி 60 இலட்சம் ரூபா பெறுமதியான 2 இலட்சம் அமெரிக்க டொலர்கள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து அவரை கைது செய்த அதிகாரிகள் மேலதிக விசாரணைகளுக்காக சுங்கப் பிரிவினரிடம் ஒப்படைத்தனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரிட்டன் அமைச்சரவையில் பெண்களுக்கு அதிக இட ஒதுக்கீடு

## நடவடிக்கை எடுக்கிறார் பிரதமர் கமரூன்

(லண்டன்)

பொதுவாகவே உலக அமைச்சரவைகளில் பெண்களுக்கான இட ஒதுக்கீடு குறைவாகவேயுள்ளன. கடந்த 2013ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இந்தியாவிற்கு வந்திருந்த இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் தனது அமைச்சரவையில் குறைவான அளவே பெண்கள் இடம் பெற்றுள்ளதை ஒப்புக்கொண்டார.

அதுபோல் மும்பை நகரில் யூனிலீவர் ஊழியர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது பெண்களின் முன்னேற்றத்திற்கு அரசும், பிற நிறுவனங்களும் அதிகமாக ஊக்குவிக்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இப்போது ஒரு வருடத்திற்கு மேல் சென்ற நிலையில் பெண்களுக்கு அதிக இடஒதுக்கீடு கொடுக்கும் விதமாக தனது அமைச்சரவையை மாற்றியமைக்க உள்ளதாக கமரூன் தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் அங்கு பொதுத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில் இதுவே இறுதியான பெரிய அமைச்சரவை மாற்றம் என்று கூறப்படுகின்றது.


தற்போதைய அமைச்சரவையில் நான்கு பெண்களே இடம் பெற்றுள்ளது குறித்து கமரூன் நீண்ட காலமாகவே விமர்சிக்கப்பட்டு வந்துள்ளார்.

அதனால் தேர் தலை எதிர் கொள்ளும் இந்த மந்திரி சபையில் அதிக பெண்கள் இடம் பெறுவார்கள் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)



வத்திக்கான் வந்திருந்த முன்னாள் போப் 16 ஆம் பெனடிக்கை (இடது) போப் பிரான்சிஸ் வரவேற்ற போது...

# இஸ்ரேலின் விமானத் தாக்குதலில் பாலஸ்தீனர்கள் 150 பேர் உயிரிழப்பு



பாலஸ்தீனத்தில் ஹமாஸ் தீவிர வாதிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் காஸா பகுதி மீது இஸ்ரேல் இராணுவத்தின் போர் விமானங்கள குண்டு வீசி தாக்கி வருகின்றன. நேற்று 5 ஆவது நாளாக இந்த தாக்குதல் தொடர்ந்தது.

ஹமாஸ் தீவிர வாதிகளின் ஆயிரத்து 100 நிலைகளின் மீது இஸ்ரேல் இராணுவம் குண்டு வீசியுள்ளது.

அதில அவர்கள் ரொக்கெட் குண்டுகளை ஏவும் இடங்கள் மற்றும் ஆயுதங்கள் தயாரிப்பு தொழிற்சாலை, அவற்றை பாதுகாக்கும் சேமிப்பு கிடங்கு மற்றும் கொமாண்டர் மையங்கள் போன்றவை அடங்கும். அவை தவிர ஹமாஸ் தீவிரவாதிகளின் அறக்கட்டளைகள், வங்கிகள் போன்றவ்வகளையும் குறி வைத்து தாக்குதல்கள நடத்தப் பட்டன.

அப்போது உடல் ஊனமுற்றோர் தங்கியி ருந்த இல்லம் மீது குண்டு விழுந்தது. அதில் 2 பெண்கள் உயிரிழுந்தனர்.

காஸாவின் மையப் பகுதியில் மசூதி உள்ளது. அதை ரொக்கெட்டுகள் மற்றும் ஆயுதங்கள் பதுக்கி வைக்கும் இடமாக தீவிரவாதிகள் மாற்றியிருந்தனர். அங்கிருந்து தான் புற்றிசல் போன்று இஸ்ரேல் மீது 700 தடவை ரொக்கெட்டுகள் வீசப்பட்டு அவை பாய்ந்து வந்தன. எனவே அந்த மசூதி மீதும் இஸ்ரேல் போர் விமானங்கள் குண்டு வீசியது. அதில் அந்த மசூதி இடிந்து சேதமடைந்தது.

நேற்று நடந்த குண்டு வீச்சில் மட்டும் 18 பாலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். அவர்களையும் சேரத்து பலி எண்ணிக்கை 150 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் நேற்று மட்டும் 45 பேர் காயம் அடைந்துள்ளனர். அதையடுத்து காயம் அடைந்தவர்களின் எண்ணிக்கை 920 ஆக அதிகரித்துள்ளது.

இந்த தகவலை காஸா சுகாதார அமைச்சக செய்தி தொடர்பாளர் அஷரப் அல்குய்திரா தெரிவித்துளளார. காயம் அடைந்த பலர் கட்டட இடிபாடுகளில் சிக்கி தவிக்கின்றனர். அவர்களை மீட்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கிடையே ஹமாஸ் தீவிரவாதிகளும் பதிலுக்கு இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகளை வீசி வருகின்றனர்.

தலைநகர் டெல் அவிவ் மீது 10 ரொககெட்டுகள் வீசப்பட்டதாக ஹமாஸ தீவிரவாதிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அத்தாக்குதலில் யாருக்கும் உயிர் சேதமோ, பொருட் சேதமோ ஏற்படவில்லை.

# உக்ரேன் கிழக்கில் போர் நிறுத்தத்தை ஐ.நா.பாதுகாப்புச்சபை அறிவிக்கவேண்டும்

## ரஷ்யா வலியுறுத்து

(நியூயோர்க்)

பொருளாதார மேம்பாட்டிற்காக கடந்த ஆண்டு இறுதியில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைய உக்ரைன் முடிவெடுத்த போது அந் நாட்டின் ரஷ்ய சார்பு ஜனாதிபதி கடைசி நேரத்தில் அதனை நிராகரித்தார். அப்போது அங்கு தொடங்கிய கலவரங்கள் இன்னும் ஓய்ந்தபாடில்லை.

ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் உக்ரைனின் கிழக்குப் பகுதி பிராந்தியங்களில் ஒன்றான கிரிமியா ரஷ்யாவுடன் இணைய, மேலும் சில பகுதிகளும் அதனைத் தொடர விரும்பின.

இதனைத் தடுத்து நிறுத்தும் உக்ரைன் அரசின் முயற்சிக்கு அமெரிக்கா உட்பட மேற்கத்தேய நாடுகள் துணை நின்றன.

முதலில் அங்கு கிளர்ச்சியாளர்கள் கை ஓங்கியிருந்தபோதும் உக்ரைனின் புதிய ஜனாதிபதி பெட்ரோ போஷெங்கோவின் தலைமையில் அரசுத்துருப்புகள் தற்போது கிளர்ச்சியாளர்களை அடக்கி வருகின்றன. அவர்கள் வசம் இருந்த சில இடங்களும் அவர்களால் மீட்கப்பட்டுள்ளன. இதனைத் தொடர்ந்து உக்ரைனின் கிழக்குப் பகுதியில் போர் நிறுத்தத்தை அறிவிக்குமாறு ஐ.நா. வின் பாதுகாப்புச்சபையிடம் வலியுறுத்துவதாக ரஷ்யத் தூதர் விடாலி சுர்க்கின் தெரிவித்துள்ளார். இந்தத் தீர்மானத்தை தற்போது மொஸ்கோ மூன்றாவது முறையாக அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதை பாதுகாப்பு சபையின் பெரும்பகுதி உறுப்பினர்கள் எதிர்த்த போதும் ரஷ்யா கிரிமியாவைத் தன்னுடன் இணைத்துக் கொண்டதே இதன் முந்தைய இரண்டு தீர்மானங்களும் ஒத்திவைக்கப்படக் காரணமாக இருந்தன. இந்த முறையும் இதே நிலை நீடிக்குமேயானால் முடிவுகள் அந்தப் பகுதி மக்களுக்கு மட்டுமில்லாமல் உக்ரைன் முழுவதிற்கும் சோகமாக இருக்கும்.

கிழக்குப் பகுதி மக்கள் செய்வது தவறு என்றும், அரசின் நிலைப்பாடு சரியென்றும் எல்லாத் தவறுகளுக்கும் ரஷ்யாவே காரணம் என்றும் குறை கூறப்படுமேயானால் எந்தவிதமான முடிவுகளும் ஏற்படாது என்று சுர்க்கின் குறிப்பிட்டார்.

தனது முன்மொழியப்பட்ட வரைவு தீர்மானத்தின் முக்கிய குறிப்புகளை அனைத்து பாதுகாப்பு கவுன்சில் உறுபபினர்களுக்கும் அளித்துள்ளதாகவும் இதன் முடிவினை இன்று காலை எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் குறித்து ஜெனவாவிலும், பெர்லினிலும் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் இரு தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டும என்பதுவும், வன்முறைகள் கைவிடப்பட்டபின் அமைதியை நிலை நிறுத்த சர்வதேசக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இந்தத் தீர்மானம் எடுத்துரைக்கின்றது. (அ)

# 255 சன்னி சிறைக்கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர்

## மனிதவுரிமை கண்காணிப்பகம்

ஈராக்கில் அரசுப் படைகளும், அவர்களுக்கு ஆதரவாக இரு க்கும் ஷியா போராளி களும் சேர்ந்து 255 சன்னி சிறைக்கைதி களை படுகொலை செய்ததாக மனிதவு ரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஜூன் 9ஆம் திகதியில் இருந்து இதுவரை சட்டத்திற்கு புறம்பாக 255 சன்னி கைதிகளுக்கு மரண தண்டனையை நிறைவேற்றியிருப்பது போர்க்குற்றத்துக்கான ஆதாரமாக இருக்கலாம் என்றும் கூறியுள்ளது.

"ஈராக்கின் மொசூல் உள்ளிட்ட பெரும்பகுதிகளை கைப்பற்றிய ஐஎஸ்ஐஎஸ் போராளிகள் அதனை தனி இஸ்லாமிய நாடாக பிரகடனம் செய்தது. இதற்கு பழிதீர்க்கும் வகையில் சன்னி கைதிகளுக்கு மொத்தமாக மரண தண்டனை வழங்கப்பட்டிருப்பதாக தோன்றுகிறது. இது சர்வதேச சட்டத்தை மீறிய செயல்" என்றும் மனித உரிமை கண்காணிப்பகம் அறிக்கை வெளியிட்டுளளது. (அ)

# மறுவாக்கு எண்ணிக்கைக்கு ஆப்கான் ஜனாதிபதி வரவேற்பு

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீத் கர்சாயின் பதவிக்காலம் முடிவடைய உள்ள நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் அங்கு புதிய ஜனாதிபதிக்கான தேர்தல் நடைபெற்றது. இதில் முன்னாள் வெளியுறவுத் துறை அமைச்சர் அப்துல்லா அப்துல்லாவும், முன்னாள் நிதியமைச்சர் அஷ்ரப் கனியும் முன்னிலை பெற்றிருந்தபோதும் யாருக்கும் பெரும்பான்மை கிட்டவில்லை.

எனவே கடந்த ஜூன் மாதம் 14ஆம் திகதியன்று இரண்டாவது சுற்று வாக்குப்பதிவு நடைபெற்றது. இதன் பூர்வாங்க முடிகள் கடந்த 7 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டன.

முதல் சுற்றில் இரண்டாமிடத்தில் இருந்த அஷ்ரப் கனி இந்த சுற்றில் 56.4 சதவிகித வாக்குகள் பெற்று வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

இந்த அறிவிப்பை ஏற்றுக் கொள்ளாத அப்துல்லா அப்துல்லா போலி வாக்குகள் அனைத்தும் நீக்கப்பட்டு மறுமுறை வாக்கு எண்ணிக்கை நடத்தப்படவேண்டும் என்றார்.

இந்தப் பிரச்சினை சுமுகமாக ஒரு முடிவுக்கு வர அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி, ஜனாதிப்தி ஹமீத் கர்சாய் மற்றும் ஐ.நா. தலைவர் ஜோன் குபிஸ் ஆகியோர் கடந்த இரு தினங்களாக இந்த வேட்பாளர்களுடன் தனித்தனியே பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுவந்தனர்.

இதன்முடிவில் ஐ.நாவின் மேற்பார்வையில் மறுவாக்கு எண்ணிக்கை நடைபெற்றால் அதன் முடிவினை ஏற்றுக்கொள்வதாக இருவரும் அறிவித்துள்ளனர். ஆப்கான ஜனாதிபதி ஹமீத் கர்சாயும் இதனை வரவேற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநராக மீண்டும் சந்திரசிறி; நல்லிணக்க முயற்சிக்கு பின்னடைவு

## நீதி அமைச்சர் ஹக்கீம் சுட்டிக்காட்டு

தெற்கில் இருக்கும் கடும் போக்காளர்களை திருப்திப்படுத்தும் நோக்குடனேயே வடமாகாண ஆளுநராக மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதன்மூலம் தமிழ் கூட்டமைப்புக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளின் அடிப்படையில் நல்லெண்ண சமிக்ஞையை வெளிப்படுத்த கிடைத்த வாய்ப்பை அரசு தவறவிட்டுள்ளது என நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மேலும் வடக்கில் யுத்தம் முடிவுக்கு வந்த நிலையிலும் இராணுவ பிடியைத் தளர்த்தவில்லை என்பதை எடுத்துக்காட்டும் வகையில் இந்த நியமனம் அமைந்துள்ளது.

வடமாகாண ஆளுநராக மேஜர ஜெனரல் சந்திரசிறியின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டமை குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

நாட்டில் எந்தவொரு பகுதியிலும் இல்லாதவாறு வடக்கு கிழக்கில் இராணுவ அதிகாரிகளை ஆளுநராக நியமிக்கும் போக்கு தொடர்ந்து வருகின்றது.

அதே போன்று திருகோணமலையில் படை அதிகாரியொருவர் அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பாரம்பரியம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும்.

ஏற்கனவே வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரனுடனான சந்திப்பின்போது வடமாகாண ஆளுநராக சிவிலியன் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச உறுதியளித்திருந்தார்.

இந்நிலையில் ஆளுநர் சந்திரசிறியின் பதவிக்காலம் முடிவடைந்த பின்னர் சிவில் அதிகாரி ஒருவரை ஆளுநராக அரசாங்கம் நியமிக்கும் என பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அது நிறைவேறவில்லை.

இதன்மூலம் அரசாங்கம் தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தும் சிறந்த வாய்ப்பை இழந்துள்ளது என்றே கருதவேண்டும். இதனால் நம்பகத்தன்மை இல்லாத சூழ்நிலையே உருவாகியுள்ளது.

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்குடன் ஒருபுறம் தென்னாபிரிக்காவின் அனுசரணையுடன் பிள்ளையார் சுழி போடப்பட்டுள்ள நிலையில் மீண்டும் விரிசல்கள், நம்பிக்கையீனங்கள் தோன்றும் வகையில் இச்சம்பவம் அமைந்துள்ளதாகவே கருதவேண்டியுள்ளது. இது எந்த வகையிலும் ஆரோக்கியமானதாக அமையமாட்டாது என்றார். (அ)

## இலங்கையின் சந்தர்ப்பவாதத்தை ரமபோஷா புரிந்து கொள்ளவில்லை

### கிரியெல்ல எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னாபிரிக்காவை பயன்படுத்தி அரசாங்கம் உலகத்தை ஏமாற்ற முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென்னாபிரிக்காவின் உப ஜனாதிபதி சிறில் ரமபோஷா, ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் முக்கியஸ்தர். அவர் அந்நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக தெரிவாகும் வாய்ப்புள்ளது.

அவரது பெறுமதியான காலத்தை வீணடிக்க அரசாங்கம் முனைந்து வருகிறது. இலங்கைக்குள் உள்ள பின்னணி, இந்த அரசாங்கத்தின் சந்தர்ப்பவாத ஏமாற்றும் சுபாவத்தை அவர் அறிந்திருக்கவில்லை.

இதன் காரணமாகவே அவர் அனுசரணை வழங்க வந்துள்ளார். அரசாங்கத்திற்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும் அதிகாரத்தை பகிரும் எவ்விதமான எண்ணமும் இல்லை.

அதிகாரத்தை பரவலாக்க போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜாதிக ஹெல உறுமய மற்றும் தேசிய சுதந்திர முன்னணி ஆகிய கட்சிகளுடன் உடன்படிக்கைகளை செய்துள்ளது. அதிகாரத்தை பரவலாக்கினால் அரசாங்கம் கவிழும்

உதாரணமாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ, அரசாங்கத்திடம் 12 அம்ச யோசனைகளை முன்வைத்தார். அதில் உள்ள பிரதான நிபந்தனை தென்னாபிரிக்காவின் தலையீடு நிறுத்தப்பட வேண்டும் என்பதாகும்.

இதனால் அதிகார பரவலாக்கம் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பில் மேலும் காலத்தை கடத்தவே அரசாங்கம் முயற்சித்து வருகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## எம்.பி. ஆகிறார் கே.வேலாயுதம்

ஊவா மாகாண முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கவுள்ள ஹரின் பெர்னாண்டோவின் பாராளுமன்ற வெற்றிடத்திற்கு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம் பதவியேற்கவுள்ளதாக தெரிய வருகின்றது.

பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடவுள்ளார். ஊவா மாகாண சபை தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளும் நாட்களுக்கு முன்னால் அவர் தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்யப்போவதாக தெரிவித்துள்ளார். ஊவா மாகாண ஐ.தே.கட்சிப் பட்டியலில் ஹரின்பெர்னாண்டோவுக்கு அடுத்தபடியாக அதிக வாக்குகளை பெற்றவர் கே. வேலாயுதம் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பொது செயலாளராவார். (அ)

## சமல் ராஜபக்சவின் மகன் முதலமைச்சர் வேட்பாளர்

ஊவா மாகாணசபையின் ஆளும் கட்சியின் முதலமைச்சர் வேட்பாளராக இம்முறையும் சசிந்திர ராஜபக்ச தெரிவு செய்யப்பட்டுள்ளார். சசிந்திர ராஜபக்ச, சபாநாயகர் சமால் ராஜபக்சவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

சசிந்திர மொனராகல மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்கின்றார். சசிந்திர, கடந்த ஊவா மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டி, முதலமைச்சராக தெரிவானார்.

மாகாணசபைத் தேர்தலில் அதி கூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றுக் கொண்டவர் என்ற சாதனையை சசிந்திர படைத்திருந்தார். கடந்த தேர்தலில் சசிந்திர ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 697 வாக்குகளைப் பெற்றிருந்தார். (அ)

## தேசிய அடையாள அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில், தாவடி தெற்கை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் சுதாகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (822934900V) சாரதி அனுமதிப்பத்திரம் (B306533) ஆகியன கண்டெடுக்கப்பட்டு வலம்புரி பத்திரிகை நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் தகுந்த ஆதாரங்களை காட்டி அலுவலக நேரத்தில் வலம்புரி பத்திரிகை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளவும். (செ)

## பிரதேச செயலகங்களை மதிப்பீடு செய்ய அமைச்சினால் விசேட குழு நியமனம்

(கொழும்பு)

பொதுமக்களுக்கான சேவை முறையாக மேற்காள்ளப்படுகின்றதா என்பது குறித்து பிரதேச செயலகங்களை மதிப்பீடு செய்வதற்காக பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு மிகவும் சிறந்த சேவையை வழங்கும் பிரதேச செயலகங்களை கண்டறிந்து அவற்றை வகைப்படுத்தும் நோக்கில் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்னவின் ஆலோசனையின் பேரில் இந்த மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

முதன்முதலாக மொனராகலை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த மதிப்பீட்டு நடவடிக்கைகள் நாடுமுழுவதிலும் விஸ்தரிக்கப்படும். இந்த மதிப்பீட்டினையடுத்து பொதுமக்களுக்கு சிறந்த சேவை யாற்றிய பிரதேச செயலகங்கள் தரப்படுத்தப்படும்.

பிரதேச செயலகங்களில் பொது மக்களுக்கு சிறந்த சேவை வழங்கப்படுகின்றதா? பிரதேச செயலகங்களின் அலுவலக முகாமைத்துவம் முறையாக மேற்கொள்ளப்படுகின்றதா?, அபிவிருத்தித் திட்டங்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்றதா? காணி தொடர்பான விடயங்களும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைகள் முறையாக கையாளப்படுகின்றனவா? , பிரதேச செயலாளர்களின் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களின் பரிபாலனம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இந்த மதிப்பீட்டுக்குழு மதிப்பீடுகளை நடத்தும்.

எவ்வித முன்னறிவித்தலுமின்றியே பிரதேச செயலகங்களுக்கு செல்லுமாறும் இந்த மதிப்பீட்டுக் குழுக்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை கிராம சேவை அதிகாரிகளின் நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் ஜோன் செனவிரத்ன பணிப்புரை விடுத்துள்ளார். (செ)

## பிரிவுத்துயர் பகிர்வு



### அண்ணாச்சாமி ஐயர் சபாரட்ண ஐயர்

சாவகச்சேரி வடக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய அண்ணாச்சாமி ஐயர் சபாரட்ண ஐயர் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் ஒருமணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மாதம்பிட்டிய இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### முத்தையா நடராசா



நிகரை வீதி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா நடராசா நேற்று முன்தினம் சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### செல்வரத்தினம் காண்டீபன்

தெல்லிப்பழை பன்னாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் காண்டீபன் கடந்த 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 17 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு West Friedhof,Schnieglinger StraBe 147 90419 Nurnberg,Germany என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### திருமதி மரினாஅன்ரனெற் ஞானேஸ் இம்மானுவேல்



பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட மரினாஅன்ரனெற் ஞானேஸ் இம்மானுவேல் கடந்த 10 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை மறுதினம் புதன்கிழமை நடைபெற்று பின்னர் பூதவுடல் கனத்தை மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### குணநாதன் பிரகாஸ்

வட்டுக்கோட்டை சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட குணநாதன் பிரகாஸ் கடந்த யூன் மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு Goldsmiths Community Centre Castillon Road,London SE6 1QD,UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கைக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)


தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தக வல் தொடர்பாடல் தொழில் நுட்பத் தில் சான்றிதழை பெறுவத ற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் பயிற்சி நிலையங்களிற்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட அலுவலகர் இ.கிருஷ்ணபாலன் அறிவித்துள்ளார்.

விண்ணப்பதாரி க.பொ.த(சா/த) பரீட் சையில் ஏதேனும் 3 பாடங் களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங் கிலம் உள்ளடங் கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த(உ/ த) பரீட்சை யில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதி ற்கு உட்பட்டவராக இருக்க வேண் டும்.

தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்ததிகதி, தேசிய அடை யாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலை பேசி இலக்கம், பயில விரும்பும் பயிற்சி நிலை யம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப் பப்படிவத்தை மாவ ட்ட அலுவலகர் NAITA இல-44 சோம சுந்தரம் வீதி சுண்டுக்குளி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண் டும்.

அத்துடன் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறி (ICTT) க்கான விண் ணப்பம் என தவறாது குறிப்பிடப்பட வேண்டும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார். (செ)



நன்றி-மிரர்

# முத்துத்தம்பியில் முத்தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

யா/முத்துத்தம்பி மகாவித்தியா லய முத்தமிழ் விழா இன்று திங்கட் கிழமை முற்பகல் 9 மணிக்கு பாட சாலை பிரதான மண்டபத்தில் பாட சாலை தமிழ் மன்றத் தலைவி ர.அறி வழகி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தி னராக யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரி நா தன் கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

சிறப்பு விருந்தினராக தமிழ் பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு மதி மீரா அருள்நேசன் மற்றும் கௌரவ விருந்தினராக கோண் டாவில் இராஜேஸ்வரி மணிமண்டப செ.திருமாறன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள். (அ)

# காணிக்கொள்ளை, காணாமல் போனோர் தொடர்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நாளை

(யாழ்ப்பாணம்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இய க்கம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு , மார்க்சிச லெனினிச புதிய ஜன நாயகக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிஎன்பன இணைந்து ஆர்ப் பாட்டம் ஒன்றினை முன்னெடுக்கவு ள்ளன.

இவ் ஆர்ப்பாட்டம் நாளை செவ் வாய்க்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத் தில் காலை 10 மணிக்கு ஆர்ப் பாட்டம் ஆரம்பமாகி பின்னர் மாவட்டச் செய லகத்திற்கு ஊர்வலமாகச் சென்று மகஜர் கையளிக்கப்படும்.

இப்போராட்டத்தில் வடகிழக்கு மற்றும் தெற்கில் இருந்தும் மக்கள் கலந்து கொள்கின்றனர். அரசியல் கட்சிகள், அரசியல் பிரமுகர்கள், மக்கள் அமைப்புக்கள், மதகுருமார், பெண்கள் அமைப்புக்கள் எனப் பல் வேறுபட்டபிரிவினர்கள்ஒன்றிணைவர்.

இவ் ஆர்ப் பாட்டம் இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த நில த்தில் குடியேற்றவேண்டும், அபிவி ருத்தி என்ற போர்வையில் மேற் கொள்ளப்படும்காணிக்கொள்ளையை நிறுத்த வேண்டும், இலங்கை இந் திய மீனவர் பிரச்சினைக்கு நிரந் தரத் தீர்வை ஏற்படுத்தித்தர வேண் டும், வடகிழக்கில் சிவில் பாது காப்பை உறுதிப்படுத்த வேண்டும், மண்ணெ ண்ணெய்விலையேற்றத் தால் பாதிக் கப்பட்ட அனைத்து மீனவர்களுக் கும் மானியம் கிடைப் பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண் டும், நாட்டில் மதம் மற்றும் இன ஒற்று மையை ஏற்படுத்துவத ற்கான நடவ டிக்கை மேற்கொள்ள வேண்டும், காணாமற் போனோர் தொடர் பான இழுத்தடிப்புக்கள் வேண் டாம், உடன் பதில் கூறவும்,சாத்வீகப் போராட்டங் கள் நிகழும் பொழுது இராணுவத் தினர் மற்றும் புலனாய்வுத்துறை யி னர் இடையூறு செய்வதை உடன் நிறு த்த வேண்டும், போரின் போது சர ணடைந்தவர்களை மீள ஒப்படை க்க வேண்டும், கைது செய்யப்பட்ட கைதி களைஉடன் விடுதலை செய்ய வேண் டும் ஆகிய கோரிக்கைகள் முன் வைக் கப்பட்டுநடத்தப்படவுள்ளன. (அ)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

அரியாலை பிரப்பங்குளம் மகா மாரி அம்மன் கோவில் (நாச்சி மார் கோவில்) மஹோற்சவம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினைந்து தினங்கள் நடைபெ றும்.

இதற்கமைய எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு தேர்த்திரு விழாவும் மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்ச வமும் நடை பெறும்.

திருவிழாக்காலங்களில் வச ந்த மண்டபப்பூசை பகல் 10 மணி க்கும் இரவு 6.15 மணிக்கும் நடைபெறும். (அ)





யாழ்ப்பாணம் சில்லாலை தூய கதிரைமாதா முன்பள்ளியின் விளையாட்டு வியாழக்கிழமை புனித சூசையப்பர் ஆலய பங்குத்தந்தை வண.நேசநாயம் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற போது, விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், முன்பள்ளி சிறார்களின் விளையாட்டு நிகழ்வினையும் விருந்தினர்களுடன் முன்பள்ளிச் சிறார்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)




# ஹாட்லிக்கு அதிபர் நியமனம்

(தும்பளை)

யா/பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் புதிய அதிபராக தர்மலி ங்கம் முகுந்தன் (SLEAS) இன்று திங்கட்கிழமை தனது கடமையை பொறுப்பேற்கவுள்ளார்.

இப் பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய என்.தேவேந்திர ராஜா கடந்த மாதம் வடமாகாண கல்வி அமைச்சின் உதவிச் செய லாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரின் வெற்றிடத்திற்கே மேற்படி அதிபர் நியமனம் வழங்கப்பட்டு ள்ளது. (அ-19)

# முச்சக்கரவண்டிகளை நிறுத்துவதற்கு இடத்தை ஒதுக்கீடு செய்து தாருங்கள்

## முச்சக்கரவண்டி சாரதிகள் கோரிக்கை

(கரணவாய்)

முச்சக்கரவண்டிகளை நிறுத்து வதற்கு உரிய இடஒதுக்கீடு இல்லா மையால் தமது முச்சக்கர வண் டிகளை வீதிகளில் நிறுத்த வேண் டியுள்ளதாக நெல்லியடி முச்சக்கர வண்டிச்சாரதிகள் விசனம் தெரிவி த்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நெல்லியடியிலுள்ள முக்கிய இட ங்களான பழைய சந்தைப்பகுதி மற் றும் புதிய சந்தைப்பகுதி, பிரதான சந்தி போன்ற இடங்களே முச்சக்கர வண்டிகளை நிறுத்துவதற்கு பொரு த்தமானவையாகும்.

ஆயினும் இவ்விடங்களை முச் சக்கரவண்டிகளின் தரிப்பிடங்களாக இதுவரை ஒதுக்கவில்லை.

இதனால் முச்சக்கரவண்டிகள் பிரதான வீதிகளின் அருகாகவே நிறுத்தப்படுகின்றன.

இந்நிலையில் விபத்துக்களும் ஏற்படும் வாய்ப்புக்கள் உள்ளதாக பொதுமக்களும் முச்சக்கரவண்டி சாரதிகளும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முச்சக்கரவண்டிகளை நிறுத்து வதற்கு உரிய இடங்களை ஒதுக்கித் தருமாறு பொதுமக்களும் முச்சக்கர வண்டி உரிமையாளர்களும் கரவெ ட்டி பிரதேச செயலர் மற்றும் வடம ராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஆகியோரிடம் பலதடவை கள் கோரிக்கை விடுத்தும் இதுவரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக் கப்பட வில்லை.

தற்போது கட்டிமுடியும் நிலை யில் உள்ள நெல்லியடி புதிய சந் தைப்பகுதியில் இதற்கென இடம் ஒதுக்கக்கூடிய வசதி உள்ளது.

அத்துடன் பழைய சந்தைப் பகு தியிலும் முச்சக்கரவண்டிகள் நிறு த்துவதற்கு இடம் ஒதுக்கலாம் என வும்அவர்கள் மேலும் சுட்டிக்காட்டு கின்றனர்.

மேலும் தற்போது நெல்லிடியில் உரிய பேருந்து தரிப்பிட வசதி இல்லை. அத்துடன் கொழும்பு, வவுனியா போன்ற தூர இடம் பயணிக்கும் பய ணிகளுக்கும் உரிய கழிப்பிட வசதி இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

வெளி மாவட்டங்களுக்கு சேவை யிலீடுபடும் பேருந்துகள் பயணி களின் வசதி கருதி தற்போது முச்சக் கரவண்டிகள் நிறுத்தப்படும் இடங் களுக்கு அருகிலேயே நிறுத்தப்படுகி ன்றன.

எனவே முச்சக்கரவண்டிச்சார திகள் மற்றும் பொதுமக்கள் ஆகி யோரின் நன்மை கருதி மழைக் காலத்திற்கு முன்னர் முச்சக்கர வண் டிகள் தரிப்பிடத்தையும் பேருந்து தரிப்பிடவசதியையும் அங்கு குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்ந்தோர் வரலாற்றை தோற்றுவிக்கின்றனர்.
வரலாறு உயர்ந்தோரைத் தோற்றுவிக்கின்றது.
- டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழர்களுக்கான புதிய தலைமையை வடக்கின் முதல்வர் உருவாக்க வேண்டும்

வடக்கு மாகாண அரசு ஏற்கெனவே எங்களிடம் இருக்கும் உள்ளூராட்சி அமைப்புகளின் நிலைமைக்கு வந்துவிட்டதோ! என்று நினைக்கும் அளவில் நிலைமை உள்ளது.

வடக்கின் மாகாண சபைக்கு மத்திய அரசு வழங்குகின்ற அதிகாரங்கள் போதாது என்ற உண்மைகளின் மத்தியில் வடக்கு மாகாண அரசின் செயற்பாடுகள் மந்த நிலைமையைக் கொண்டிருப்பது தவிர்க்க முடியாததே.

எனினும் இருக்கக் கூடிய அதிகாரங்களை பயன்படுத்துவதிலும் நாம் பலவீனமாக இருக்கிறோம் என்பதை ஏற்றுத்தான் ஆக வேண்டும்.

எதுவாயினும் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடைபெற்ற போது, முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட ஓய்வுபெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக தமிழ் மக்கள் கருதி வாக்களிக்கவில்லை. அவரை தனியொரு தமிழ்த் தலைவராகக் கருதியே தமிழ் மக்கள் தங்களின் ஏகோபித்த ஆதரவை வழங்கியிருந்தனர்.

இதன் ஊடாக புதிய - நேர்மையான தமிழ்த் தலைமையை தமிழ் மக்கள் விரும்பி அதற்கான ஆணையையும் தமிழ் மக்கள் வழங்கியிருந்தனர்.

இருந்தும் தமிழ்மக்கள் தனக்கு அளித்த வாக்குகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பெற்றுத் தந்ததாக வடக்கின் முதல்வர் நினைத்திருப்பாராயின் அதனை மாற்றிக் கொள்வது அவசியமானதாகும்.

வடக்கின் முதல்வர், தமிழ் மக்களின் தனித்துவமான தலைவராகக் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டு கட்சியின் கட்டுப்பாடுகள், இடையூறுகள், இடைஞ்சல்கள் என்பவற்றைத் தூக்கியெறிந்துவிட்டு தமிழ் மக்களுக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்ற வேண்டும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் வடக்கின் முதல்வரிடமிருந்து நிறையவே எதிர்பார்க்கின்றனர். அந்த எதிர்பார்ப்பில் முக்கியமானது, ஒரு பலமான அரசியல் தலைமையை முதல்வர் விக்னேஸ்வரன் அவர்கள் உருவாக்க வேண்டும் என்பதாகும்.

உண்மையைக் கூறப்போனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலும்; அதில் இருக்கக் கூடிய சிலரின் நடவடிக்கைகளில் தமிழ் மக்களுக்கு அறவே நம்பிக்கையும் பிடிப்பும் இல்லை.

இருந்தும் விடுதலைப் புலிகள் இவர்களின் தலையில் தொட்டு ஞானஸ்தானம் கொடுத்ததன் காரணமாகவும் தமிழர்களுக்கு இன்னொரு பலமான அரசியல் தலைமை இல்லையென்ற நிலைமையாலும் தேர்தல் காலங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது.

இந்த வாக்களிப்பை உண்மையான ஆதரவாக நினைத்து, கூட்டமைப்பின் தலைமையை புனருத்தாரணம் செய்யாமல் விட்டால் எதிர்காலத்தில் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் கணிசமாகக் குறைவடையும்.

எனவே தமிழ் மக்கள்;, ஓய்வு பெற்ற நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் புத்திஜீவிகள், தமிழ் பற்றாளர்கள் மற்றும் மக்களிற்கு சேவையாற்றும் மன நிலை கொண்டவர்களையும் உள்ளடக்கிய புதிய அரசியல் தலைமையை வேண்டி நிற்கின்றனர்.

இதனைச் செய்யக் கூடிய அதிகாரம் வடக்கின் முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கே உண்டு.

அந்த அதிகாரத்தை தமிழ் மக்கள் அவருக்கு அளித்த வாக்குகள் மூலம் வழங்கியுள்ளனர். எனவே கட்சி, அதன் கட்டமைப்பு என்ற எந்த விதிமுறைகளுக்கும் உட்படாமல் - கட்சிக் காரர்களைச் சமாளித்துப் போதல் என்ற அணுகு முறையைக் கைவிட்டு, மக்கள் வழங்கிய ஆணையை ஏற்று புதியதொரு தமிழ்த் தலைமையை வடக்கு மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரன் உருவாக்க வேண்டும். இது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# போர்க்குற்ற விசாரணைகளுக்கு இந்தியா ஆதரவளிக்க வேண்டும்

## மோடிக்கு ராமதாஸ் கடிதம்

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் முன்னர் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசின் நிலைப்பாட்டை இந்திய மத்திய அரசு பின்பற்றக் கூடாதென பா.ம.க. நிறுவுனர் ராமதாஸ், பிரதமர் மோடியை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை போர்க்குற்ற விசாரணைக்கு ஆதரவளிக்க இந்திய மத்திய அரசு மறுப்பதாக வெளியான செய்தியை அடுத்து அவர் நேற்று அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில்,

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் விசாரணைக்கு இந்தியா ஆதரவளிக்காது என்று வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் அறிவித்திருக்கிறார்.

இலங்கைக்கு ஆதரவான இந்தியாவின் இந்த நிலைப்பாடு அதிர்ச்சியளிக்கிறது. இந்தியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த இலங்கை வெளிவிவ கார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜை டெல்லியில் சந்தித்து பேசினார்.

அதன்பின் செய்தியாளர்களிடம் பேசிய வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளரிடம், இலங்கைக்கு எதிரான ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் போர்க்குற்ற விசாரணையை இந்தியா ஆதரிக்குமா? என்று கேட்ட போது, இலங்கை மீதான போர் குற்றச்சான்றுகள் குறித்து விசாரணை நடத்தக் கோரும் தீர்மானம் ஐ.நா. மனித உரிமை பேரவையில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது அதில் இந்தியா பங்கேற்கவில்லை.

அதுமட்டுமின்றி, இலங்கைக்கு நிபுணர் குழுவை அனுப்பி விசாரிக்க வேண்டும் என்று தீர்மானத்தில் இடம்பெற்றிருந்த ஒரு பிரிவை எதிர்த்து இந்தியா வாக்களித்துள்ளது.

எனவே, இந்த பிரச்சினையில் எங்களின் நிலைப்பாடு தெளிவாக இருக்கிறது. இந்த விசாரணையை ஆதரிக்க மாட்டோம் என்று பதிலளித்திருக்கிறார்.

இலங்கைக்கு ஆதரவான இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸிடம் சுஷ்மா சுவராஜும் தெரிவித்து விடடதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இலங்கைப் போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசுதான் நீதி பெற்றுத் தரும் என்று தமிழ்நாட்டு மக்கள் நம்புகிறார்கள்.

எனவே, இலங்கைப் பிரச்சினையில் முன்னர் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் அரசின் நிலைப்பாட்டை புறந்தள்ளிவிட்டு, மனித உரிமையை பாதுகாக்கும் வகையிலான நிலைப்பாட்டை பிரதமர் மோடி மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணையை சென்னையில் நடத்த அனுமதிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன் என்று ராமதாஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார். (எ-6)

# தமிழ்க் கூட்டமைப்பின் நிலைப்பாட்டை யாழில் வெளிப்படுத்துவார் சம்பந்தன்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எதிர்கால நடவடிக்கைகள், முக்கிய திட்டங்கள் குறித்து அதன் தலைவரும, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் யாழ்ப்பாணத்தில் அடுத்த வாரம் அறிவிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ்.சுரேஷ் அணியின் 34 ஆவது மாநாடு எதிர்வரும் 19ஆம், 20ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. 19ஆம் திகதி யாழ்ப்பாணம் நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியிலும் இரண்டாம் நாள் நிகழ்வுகள் 20ஆம் திகதி யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வில் கலந்து கொளவதற்காக சம்பந்தன் எதிர்வரும் 19 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

மறுநாள் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் நிகழ்வில் கலந்து கொண்டு அவர் விசேட உரை நிகழ்த்துவார். இதன்போதே அவர் கூட்டமைப்பின் நகர்வுகள் குறித்து முக்கிய அறிவிப்பை வெளியிடுவார் என்று நம்பகரமாகத் தெரியவருகிறது.

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு குறித்த எதிர்கால நடவடிக்கைகள், வடக்கு மாகாண சபைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள், வடக்கு மாகாண ஆளுநராக சந்திரசிறியின் மீள் நியமனம் குறித்து கூட்டமைப்பின் நிலைப்பாடு உள்ளிட்ட முக்கிய விடயங்களை உள்ளடக்கி அவர் பேசுவார் என்றும்,

தென்னாபிரிக்க அரசின் நல்லிணக்க - சமாதான முயற்சிகளில் இலங்கை அரசு ஈடுபாடு காட்டாத நிலையில் தமிழ்த தேசியக் கூட்டமைப்பின் அடுத்த கட்ட நடவடிக்கைகள் எவ்வாறானதாக இருக்கும் என்பது குறித்தும் அவர் பேசுவார் என்று கூறப்படுகின்றது.

இதேசமயம் ஈழத் தமிழர் தொடர்பான சர்வதேசத்தின் நிலைப்பாடுகள் தொடர்பிலும் அவர் கருத்துரைக்கலாம. இவை தவிர தமிழ்பேசும் சமூகம் மீது தொடர்ந்து அரசு கட்டவிழ்த்துவிடும் வன்முறைகள், தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் ஒற்றுமை குறித்தும் புலம்பெயர் சமூகத்தவரின் பங்களிப்புக் குறித்தும் அவரது உரை நீண்டதாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-6)

# இரணைமடு தண்ணீருக்காக உரிமைப் போராட்டம்

(கிளிநொச்சி)

இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் கொண்டுவரும் திட்டத்திற்கான 48 மில்லியன் ரூபாய் நிதி திரும்பிச் செல்வதினைத் தடுக்கக் கோரி, தண்ணீருக்கான உரிமைப் போராட்டத்தினை எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் விஜயகாந் தெரிவித்தார்.

முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


இரணைமடு குளத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கொண்டுவரும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அதற்காக முதலீடு செய்யப்பட்டிருந்த 48 மில்லியன் ரூபாய நிதி திரும்பிச் செல்லவுள்ளது.

இந்நிலையில் மேற்படி நிதி திரும்பிச் செல்லாமலிருக்க வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் ஆகியோர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், ஜனாதிபதியினூடாகவும், நீதிமன்றத்தினூடாகவும் நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கான முதற்கட்டமாகவே, எதிர்வரும் 17 ஆம் திகதி போராட்டமொன்று முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (செ-6)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### சிந்தனைத் திறன் வரை



சிந்தனைத் திறனை வளர்க்க மூன்று இணைப்பு முறைகளைப் பின்பற்றவேண்டும்.

1.திட்டமிட்டுச் செயல் புரிதல் (Planned Work)
2. விழிப்பு நிலை (Awareness)
3.தற்சோதனை (Introspection)

இவற்றில், விளைவைக் கணித்து அதற்கு ஏற்ற அளவிலும் முறையிலும் மனம், மொழி, செயல்களைப் பயன்படுத்தலே திட்டமிட்டுச் செயல் புரிவதாகும்.

தேவை, பழக்கம், சூழ்நிலை இவற்றால் உணர்ச்சிவயப்படாது தன்னையும் தான் அடையவெண்டிய பயனையும் மாறவாத விழிப்பு நிலையில் செயலாற்றும் திறன்தான் விழிப்பு நிலையாகும்.

ஒவ்வொரு செயல் முடிவிலும் விளைவைக் கணித்து, 'தான் செய்த முறை, அதில் விளைந்த தவறுகள் அல்லது நன்மைகள் இவற்றைச் சிந்தித்து உணர் வது; ஒவ்வொரு நாளும் இரவு படுக்குமுன், அன்று தான் செய்த செயல்களனைத் தையும் நினைவிற்கொண்டு வந்து தன் செயல்களைச் சோதிப்பது, செயலில் தவறு கண்டால் இனி அந்தவாறு ஏற்படாத உறுதி கொள்வது, நலமாக இருந்தால் அந்த முறையை அழுத்தமாக மனதில் பதிவு செய்து கொள்வது, இவை அனைத்தும் இணைந்த முறையே அகத்தாய்வுச் செயலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹென்றீசியன் பிறிமியர் லீக் உதைபந்தாட்ட போட்டி

(மானிப்பாய்)

ஹென்றீசியன் பிறிமியர் லீக் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் விலகல் முறையிலான முதலாம் கட்டப் போட்டிகள் நிறைவு பெற்றுள்ளன. இவற்றில் வெற்றி பெற்ற எட்டு அணிகள் சுப்பர் 8 சுற்றுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

சுப்பர் 8 சுற்றில் அணி கள் இரு குழுக்களாக பிரிக்கப்பட்டு லீக் முறையில் விளையாடவுள்ளன.

இதில் இரு குழுக்களிலும் அதிக புள்ளிகளைப் பெறும் இரு அணிகள் அரையிறுதியில் விளையாடத் தகுதிபெறும். இதில் குழு ஏ யில் மயிலங்காடு ஞானமுருகன், யாழ்.பல்லைக்கழகம், நாவாந்துறை சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் என்பன இடம் பெற்றுள்ளன.

குழு பி இல் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழகம் ஈவினை கலைமகள் விளையாட்டுக்கழகம் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகம் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் என்பன இடம் பெற்றுள்ளன.

நடைபெற்ற முதலாவது போட்டியில் அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகமும் மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. இந்தப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

மின்னொளியில் நடைபெற்ற இந்தப்போட்டி மிகவும் விறுவிறுப்பான போட்டியாக அமைந்திருந்தது. இரு அணி வீரர்களும் துடிப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஞானமுருகன் வீரர்கள் சிறப்பாக பந்தை நகர்த்தி கோல் கம்பத்தை நோக்கி அடித்தபோதெல்லாம் சிறந்த முறையில் செயற்பட்ட அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழக கோல் காப்பாளர் அவற்றைத் தடுத்த வண்ணமிருந்தார். அதனால் போட்டியில் இறுதி வரை ஞானமுருகன் அணியினரால் கோல்களைப் பெறமுடியவில்லை.

மனோகரா விளையாட்டுக் கழகத்தின் முன்கள வீரர்கள் பந்தினை நகர்த்திச் சென்ற போதெல்லாம் ஞானமுருகன் அணியின் பின்கள வீரர்களினால் அவை தடுத்து நிறுத்தப்பட்டன.

இதனால் மனோகராவின் கோல் பெறும் வாய்ப்புக்கள் வீணாகின. ஆட்டநேரம் முழுவதும் பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டி ஈற்றில் இரு அணிகளும் கோல்கள் எதையும் பெறாது சம நிலையில் முடிவுற்றது. (சு-23)

# கரைச்சி பிரதேச செயலகம் நடத்திய கிராமங்களுக்கிடையிலான வி.போட்டி

(கிளிநொச்சி)

உலக தரிசன ( World Vision) நிறுவனத்தின் அனுசரணையுடன் கரைச்சி பிரதேச செயலகம் நடத்திய ஐந்து கிராமங்களுக்கான சிறுவர் கழக விளையாட்டுப்போட்டி செல்வாநகர் செந்தணல் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் பங்குபற்றிய கிராமங்கள்,

கிருஸ்ணபுரம்- மலரும் மொட்டுக்கள், விநாயகபுரம்- விநாயகர், செல்வாநகர்- செந்தாமரை, அம்பாள் நகர்- அம்பாள், சாந்தபுரம்- கலைமகள் ஆகிய இக் கழகங்களுக்கிடையில் தொடர்ந்து நடைபெற்ற போட்டிகள் அண்மையில் நடைபெற்றன.

ஆண், பெண் இருபாலாருக்குமான நிகழ்ச்சிகள் பின்வருமாறு, கிளித்தட்டு, கரப்பந்தாட்டம், கபடி, கிரிக்கெட், கயிறிழுத்தல்.


இப்போட்டியில் வெற்றி பெற்ற கழகங்கள் வருமாறு,

கிளித்தட்டு ஆண்கள்- சாந்தபுரம்(கலைமகள்), பெண்கள்- செல்வாநகர் (செந்தாமரை), கிரிக்கெட் ஆண்கள் -செல்வாநகர் (செந்தாமரை), கபடி ஆண்கள்- விநாயகபுரம் (விநாயகர்), பெண்கள்- சாந்தபுரம் (கலைமகள்), கரப்பந்தாட்டம் ஆண்கள்- கிருஸ்ணபுரம் (மலரும் மொட்டுக்கள்),பெண்கள்- கிருஸ்ணபுரம் (மலரும் மொட்டுக்கள்).

தொடர்ந்து முட்டி உடைத்தல், கயிறிழுத்தல் என்பன நடைபெற்றன. (சு-271)

# சிங்கப்பூர் கராத்தே போட்டி

## ஸ்ரீலங்கா கழக மாணவர்கள் சிறந்த போட்டியாளர்களாக தெரிவு







சிங்கப்பூர் கராத்தே தோ ஒன்றியத்தின் karate Union of Singapore 2014 ஆம் ஆண்டு சுற்றுப் போட்டி அண்மையில் சிங்கப்பூர் Nah R+ q; Yoh Chu Hang உள்ளக விளையாட்டுத்திடலில் நடை பெற்றது. இதில் கலந்து கொண்ட கோட்டாக்கான் கராத்தே அக்கடமி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா கழக மாணவர்களான ரி.மார்சல் மற்றும் டி.சான் பொணி ஆகியோர் 16, 17 வயது திறந்த காட்டா போட்டியில் சிறந்த 8 போட்டியாளர்கள் Best Eight வரிசையில் தெரிவாகியுள்ளனர்.

சோட்டோக்கான் கராத்தே அக்கடமி இன்டர்நஷனல் ஸ்ரீலங்கா கழக பிரதம பயிற்றுநர் சென்சேய் அன்ரோடினேஸ் சிங்கப்பூர் கராத்தே ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட கராத்தே நடுவர்களுக்கான பயிற்சிப் பட்டறை மற்றும் தேர்வில் பங்கெடுத்து சித்தியடைந்துள்ளார். உலக கராத்தே தோ சம்மேளனம் WKF மற்றும் ஆசிய கராத்தோ தோ சம்மேளனம் AKF ஆகியவற்றின் நடுவர் சென்சேய்.ரி. சார்ஜன் இவருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். சென்சேய். அன்ரோடினேஸ் சிங்கப்பூர் கராத்தே தோ ஒன்றியத்தின் சுற்றுப்போட்டியில் நடுவராக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (சு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வடமாகாண தடகள போட்டி; முருகவேள் வித்தி மாணவி சாதனை






(யாழ்ப்பாணம்)

யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற வடமாகாணப் பாடசாலைகளுக் கிடையிலான தடகளப் போட்டியில் எழுவைதீவு முருகவேள் வித்தியாலய அணி பி.கல்சியா 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான ஈட்டியெறிதல் போட்டியில் பங்குபற்றி முதலாமிடத்தை பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளார். போதிய விளையாட்டு வசதிகளற்ற பிரதேசப் பாடசாலையி லிருந்து பங்குபற்றி தேசியப் போட்டிக்குத் தெரிவானதன் மூலம் தீவக வலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளார். (சு)








அல்வாய் வடக்கு இளங்கோ சனசமூக நிலைய அமரர் டாக்டர் பொன்.மகாலிங்கம் ஞாபகார்த்த மழலைகள் பூங்காவின் வருடாந்த விளையாட்டு நிகழ்வு விழா நிலைய தலைவர் மா.மெய்யழகன் தலைமையில் நடைபெற்ற போது... (படங்கள்:-சிவநகர் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரேசில் அணிக்குத் தொடரும் சோகம் :

# 3-வது இடத்தையும் நெதர்லாந்திடம் தாரை வார்த்தது






பிரேசில் அணிக்கு உலகக் கிண்ணத் தொடரின் இறுதி நாட்கள் சோகமயமாக அமைந்துவிட்டது.

ஓரிரு நாட்களுக்கு முன்னர் தனது சொந்த ரசிகர்கள் மத்தியில் ஜேர்மனியிடம் அரையிறுதி போட்டியில் படுதோல்வியைச் சந்தித்த அவ்வணி. நேற்று நடந்த 3-ம் இடத்துக்கான போட்டியில் வெற்றிபெற்று ஆறுதல் அடையும் என்று எதிர்பார்த்த போதிலும் அதிலும் தோல்வியே கிட்டியது.

உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் மூன்றாவது இடத்திற்கான போட்டி நேற்று அதிகாலை இடம்பெற்றது.

இந்தப் போட்டியில் பிரேசில் மற்றும் நெதர்லாந்து அணிகள் விளையாடின.

விறுவிறுப்பான போட்டியில் நெதர்லாந்து அணி ஆட்டத்தின் முதல் பாதியில் 0:2 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதியில் இதற்கு பதிலடி கொடுக்க பிரேசில் அணி கடுமையாகப் போராடியது. ஆனால் அவர்களின் கோல் முயற்சியை நெதர்லாந்து வீரர்கள் தவிடுபொடியாக்கினர்.

இறுதியல் கூடுதலாக தரப்பட்ட நிமிடங்களிலும் நெதர்லாந்து அணி ஒரு கோல் அடித்து மூன்றாவது இடத்தை கைப்பற்றியது.

நெதர்லாந்து அணியில் பெர்ஸி, பிளைண்ட்; வினால்டம் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.

மூன்றாவது இடத்தைப் பிடித்த நெதர்லாந்து அணி வீரர்களுக்கு வெண்கல பதக்கம் வழங்கப்பட்டது.

## சிறுமிமீது பாலியல் துஷ்பிரயோகம்

(யாழ்ப்பாணம்)

13 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இளைஞர் ஒருவரை நெல்லியடி பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவில் உட்பட்ட ராஜகிராமம் பகுதியில் நேற்றுமாலை 13 வயதுச் சிறுமி ஒருவர் 25 வயது இளைஞர் ஒருவரால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்ட நிலையில் அது தொடர்பாக தமக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்தே குறித்த இளைஞனை தாம் கைது செய்ததாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர் அதேயிடத்தைச் சேர்ந்தவர் எனவும் பாதிக்கப்பட்ட சிறுமியின் நெருங்கிய உறவினர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிறுமி தனது தம்பியுடன் குடிநீர் எடுப்பதற்காக அருகில் உள்ள கிணற்றிற்குச் செனறபோதே பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமியாழ்போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள அதே வேளை கைது செய்யப்பட்ட இளைஞன் பொலிஸாரின் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-6,10,60)

## காணி அள...

திகதியும், 11ஆம் திகதியும், காணிகள் அளவிடும் நடவடிக்கை இடம் பெறவிருந்த நிலையில் அந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

கீரிமலை சேந்தான்குளம் மற்றும் திருவடிநிலை ஆகிய பகுதிகளிலுள்ள தமிழ்மக்களுக்கு சொந்தமான 127 ஏக்கர் காணிகளைச் சட்டபடி சுவீகரிக்கும் நோக்கில் கடந்த 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை காணி அளவீடு செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாகாண சபை பிரதேச சபை மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் தலையீட்டினால் முதன்முறையாக தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் இரண்டாவது முறையாகவும் கடந்த 11 ஆம் திகதி காணி அளவிடும் நடவடிக்கை இடம் பெறயிருந்த நிலையில் அங்கு பொது மக்களுடன் சென்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் மாவை.சேனாதிராஜா தலைமையிலான அக்கட்சியின் பாராளுமன்ற மற்றும் மாகாண, பிரதேசசபை உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பனை வெளியிட்டதனால் இரண்டாவது முறையாகவும் காணி அளவிடும் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது.

இது இவ்வாறிருக்கையில் இன்று கீரிமலைப்பகுதியில் காணி அளவிடும் நடவடிக்கை இடம்பெறவுள்ளதாக தெரியவந்துள்ளது.

திருவடி நிலைப்பகுதியில் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்களினுடைய 120 ஏக்கர் காணிகளையும் சேந்தாங்குளம் ஆரோக்கியநாதர் தேவாலயத்திற்குச் சொந்தமான 4 ஏக்கர் காணியினையும் மற்றும் கீரிமலையில் 6 குடும்பங்களுக்குச் சொநதமான 3 ஏக்கர் காணியையும் சுவீகரிகரும் நோக்கில் நிலஅளவையாளர்களைக கொண்டு அளவீடு செய்யும் பணிகள் மேற்கொள்ளப்படவிருந்த நிலையிலையே அந்த நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-6)

## ஆயுதக்குழுக்களின் முறி...

பட்சம் அதன் ஆத ரங்களை அடிப்படையாக கொண்டு பாகிஸ்தானின் முறைமையை கையாளலாம். இலங்கையின் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், பாகிஸ்தான் ஆயுதக் குழுக்களுக்கும் இடையில் வித்தியாசங்களும் வித்தியாசமான் நிலைமைகளும் உள்ளன.

இலங்கையின் அனுபவத்தின் படி பேச்சு வார்த்தை மற்றும் இராஜதந்திரம் மூலம் மாத்திரம் போர்க் குணத்தை அடக்க முடி யாது என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மாதிரியான தீர்மான பலம் மட்டுமே இந்த பிரச்சினைக்கு தீர்வாக அமையும். இவ்வாறான நடவடிக்கைகளின் போது மனித உரிமை கொள்கைகளை பாதுகாப்பது கடினமாக இருக்கும்.

இலங்கையின் அனுபவம் அதன தரத்தின் அளவை விட மிகவும் முக்கியமானது என்பதை நிரூபித்துள்ளது.

விடுதலைப் புலிகளை சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தவும் அதன் நிதி வளங்களை தடுப்பதிலும் இலங்கை இராஜதந்திர ரீதியான வெற்றியை பெற்றுள்ளது எனவும் பாகிஸ்தான் பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார். (எ-6)

## புலிகள் விட்டுச் சென்ற...

தமிழர்க்ள் பற்றியும் சிந்திக்க வேண்டும். மலையகத்தமிழர்களின் வாக்குரிமைபறிக்கப்பட்டபோதுதான் எமது கட்சி ஆரம்பிக்கப்பட்டது.

அவர்களுக்காகத்தான் ஆரம்பிக்கப்பட்டது. எனவே அவர்களின் நலன்களையும் தனித்துவத்தையும் பேணி பாதுகாக்கக்கூடிய முறையென்ன இந்த சுவிஸ்முறை தான். அதாவது நுவரேலிய, கண்டி போன்ற மாவட்டத்தில் அவர்கள் முதன்மையானவர்களாகயிருக்கின்றார்கள்.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலே 2002 ஆம் ஆண்டு ஒஸ்லோ உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அது உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டியை நோக்கிய பயணம். இலங்கைத தமிழரசுக்கட்சி கடந்த 1949 ஆம் ஆண்டு தொடக்கம் வலியுறுத்தி வந்தது உள்ளக சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டியை பற்றித்தான். அதற்கு எரிக்சொல்ஹெம் மத்தியஸ்தம் வகித்து வந்த நிலையிலே அடிக்கடி இங்கு நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் பற்றி அறிவித்தார்.

இந்தியாவின் அனுசரணையுடன்தான் இது இடம்பெற்றது. இந்தியா 13 ஆவது திருத்தசட்டம் தான் எங்களுக்கு தீர்வு சமஷ்டியை ஏற்க முடியாது என்று சொல்லவில்லை. மறைமுகமாக அவர்களும் இதனை ஆதரித்தனர் விடுதலைப்புலிகள்மறைநதாலும் தமிழர்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக சமஷ்டியே [illegible]. ஆகவே இன்று பேச்சு வார்த்தை[illegible]கள் ஆரம்பிக்கப்பட்டால் நிச்சயமாக நாங்கள் விடுதலைப்புலிகள் விட்டுச்சென்ற இடத்திலிருந்த சமஷ்டி பற்றித்தான் பேசவேண்டும். ஏன் என்றால் 1949 இல் இருந்து தமிழரசுக்கட்சி சமஷ்டியைத்தான் வற்புறுத்தி வந்தது.

இதற்கு அப்பால் நல்லதொரு சூழல் இருக்கின்றது. சர்வதேச ரீதியில் எங்களுடைய பிரச்சினை இன்று கொண்டுவரப்பட்டுள்ளது நியாயமான தீர்வு கொடுக்கவேண்டும் என்று சர்வதேசம் காத்துக்கொண்டு இருக்கின்றது. முன்பு எப்போதும் இல்லாத சந்தர்ப்பம் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ளது. புலம்பெயர் அமைப்புககள் முன்பு எப்போதும் இல்லாத அளவற்கு மிகவும் உசாராகவுள்ளன. அவர்கள் இந்தத்தீர்விலே அக்கறை காட்டு[illegible] [illegible] அமைப்புக்களின் பங்களிப்பு இன்றி சர்வதேச விசாரணை வந்திருக்க முடியாது. சர்வதேச சூழல் எமக்கு வாய்ப்பாகயிருக்கின்றன. அந்தச் சூழலை பயன்படுத்தி களத்திலே நிறகின்ற நாங்கள் ஒரு சுயாட்சி சமஷ்டி அமைப்பிற்காக பாடுபடவேண்டும். இதுதான் எங்களின் இறுதி முடிவு என்பதை இந்திய அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகளின் போது முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

13 ஆவது திருத்தம் பற்றிபேசும் காலம் முடிந்து விட்டது. அன்றே அமிர்தலிங்கம் அவர்கள் இது எங்களுடைய மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாது என்று கூறிவிட்டார். அவரின் வாக்கை வேதவாக்காக ஏற்று எமது எதிர்கால நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2022 ஆம்...

இதேவேளை எதிர்காலத்தில் நடைபெற வுள்ள தேர்தல்களை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்திற்கு எதிராக பொய்ப் பிரசாரங்களை மேற்கொள்ள சூட்சுமமான வேலைத்திட்டத்தை ஆரம்பித் துள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரி வித்துள்ளார்.

200க்கும் அதிகமான இணையத்தளங் கள் ஊடாக அரசாங்கத்திற்கு எதிராக பொய் குற்றச்சாட்டுக்களை சுமத்தும் நடவடிக்கை தற்பொழுது செயற்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கண்டியில் நடைபெற்ற வைபவம் ஒன் றில் பேசும் போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரணில் விக்கிரமசிங்க சந்தை சந்தையாக சென்றாலும் அவருடன் மக்கள் இல்லை. இதனால் அரசாங்கத்தின் மீது சேறுபூசி வருகின்றனர்.

200க்கும் மேற்பட்ட இணையத் தளங் கள் தினமும் அரசாங்கத்திற்கு எதிரான செய்திகளை வெளியிடுகின்றன.

மக்கள் இருக்கும் சகல இடங்களுக்கு தமது பிரதிநிதிகளை அனுப்ப ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருகிறது.

ஜே.வி.பியும் இதற்கு பங்களிப்பு செய் கிறது. இவற்றுக்கு பதிலளிக்க எமக்கு அறிவு இருப்பதாக நம்புகிறோம்.

போரில் வென்றாலும் போர் வெற்றியின் பலன்கள் மக்களுக்கு கிடைக்கவில்லை என்று கூறி வருகின்றனர். போரில் வென்ற தன் பிரதிபலன்களை நாம் அனுபவித்து வரு கின்றோம் எனவும் மகிந்த அமரவீர குறிப் பிட்டுள்ளார். (ஏ-6)


## சம்பந்தனின்...

இதனையடுத்து படைத்தரப்பினர் சம்ப ந்தனின் வீட்டு படுக்கையறை, கழிப்பறை மற் றும் கை கழுவும் இடங்களைச் சோதனை யிட்டனர்.

சில நிமிடங்கள் கழித்து படைத்தரப்பின் குறிப்பிட்ட அந்த அதிகாரி சம்பந்தனிடம் சென்று நன்றி தெரிவித்து விட்டுச் சென்றார் என்று இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ஏ-6)

# மரண அறிவித்தல்

## சில்வஸ்ரர் ஜோச் (ஜோச்சப்பா)



மாத்தளனைப் பிறப்பிடமாகவும் இரணைப்பாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சில்வஸ்ரர் ஜோச் (ஜோச்சப்பா) முன்னாள் CTP நடத்துனரும் மாத்தளன் அடைக்கல மாத ஆலய முன்னாள் மூப்பர் (13.07.2014) நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சில்வஸ்ரர், எலிசபேத் ஆகியோரின் அன்புப் புதல்வனும், அந்தோனியாபிள்ளையின் அன்புக் கணவரும் ஜெயம்மா, செல்வ ராணி, ஜெயம் (CTP நடத்துனர் -வவுனியா), இந்திராணி, ஜெறாட் (வெஸ்ரன் யூனியன் உரிமையாளர்-புதுக்குடியிருப்பு), ஜெயகுமார் (கால்நடை வைத்தியசாலை-புதுக் குடியிருப்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 14.07.2014 இன்று மாலை 3.30 மணியளவில் இரணைப்பாலை பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக் கப்பட்டு இரணைப்பாலை பற்றிமா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-குடும்பத்தினர்.

(சி-7936)

## இலங்கை...

சாதகமாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கு மாறு அந்த நாடுகளின் அரசுகளைத் தாம் ஊக்குவித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் அண்மையில் இடம்பெற்ற அளுத்கம வன்முறைச் சம்பவங்களின் சூத் திரதாரிகளை சட்டத்தின் முன்நிறுத்துவத நகும், அதன்மூலம் நீதியை நிலை நாட்டு வதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு கிறிஸ் ரொப் ஹெய்ன்ஸ் இலங்கை அரசாங்கத்தை அவர் வற்புறுத்தியிருந்தார்.

அத்துடன், இத்தகைய சம்பவங்களில் பொறுப்புக்கூறலை நிலைநிறுத்துவதில் வெளிப்படுத்தப்படும் உறுதியே, சிறுபான்மை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என வும் ஐ.நா சிறப்பு அறிக்கையாளர் கிறிஸ் ரொப் ஹெய்ன்ஸ் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஏ-6)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532

வழிகாட்டல் செயலமர்வு
A/L -14
விவசாய விஞ்ஞானம் (08)
யூலை 18, 19, 20
பி.ப 1.00 மணி
வை.சசிகுமார்
DMI-JAFFNA
(சி-7932)

DCM ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.
(சிவன் கோவில் முன்பாக)
A/L 2015, 2016
கணக்கீடு
ஆரம்பம்:- 15.07.2014 செவ்வாய் 4.00PM
Note:-வாரத்தில் 8 மணித்தியால வகுப்பு
AP.பகீரதன் B.B.A (FM spl)

பதவி வெற்றிடம்
ரேடியோ மெக்கானிசம் தெரிந்த அனு பவமுள்ள வேலையாட்கள் தேவை. யாழ்ப் பாணம், நெல்லியடி, கிளிநொச்சி, வவு னியா, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
MICRO PC SYSTEMS
218, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.:-021 2225893
(சி-7929)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
THE ONLY OFFICIAL FRENCH LANGUAGE & CULTURAL CENTRE
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி af Alliance Française de Jaffna
■ சுற்பதற்கு FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சுர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 1883 PARIS இல் நிறுவப்பட்டு, யாழில் 1976 முதல். 136+ நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரி யர்கள், பிரெஞ்சு மொழிபெயர்ப்புகள், AUDIO - VISUAL AIDS, பிர மாண்டமான நூலகம், விரைவான பேச்சு ஆற்றல், STANDARD PRONUNCIATION,
■ வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராட்சி, வன்னி, மன்னா ரைச் சேர்ந்தவர்களும்) AF இல் படித்தே பிரான்ஸ் செல்கிறார்கள். குறிப்பு:- பிரான்சில் பிரெஞ் கற்பதற்கு AF இன் CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF A1, A2 = ILTES : AF இன் கிளை களில் மட்டுமே எழுத முடியும்) மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றன.
இன்றே பதிவு செய்யுங்கள்... புதிய வகுப்புகள் மிக விரைவில்... தனி நபர்களிடம் சென்று பணத்தையும் நேரத்தையும் இழக்காதீர்கள்.
(6898) ■ வட மாகாணத்தில் ஒரே முகவரிதான்...
61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.
கச்சேரி → ஆலயம் → AF / ஆரியகுளம் → ஸ்ரான்லிறோட்டுக்கா றோட் → AF

யாழ்.நகரின் முன்னணிக் கல்வி நிலையம் உங்கள் சுன்னாகம் நகரில்
DCM சிவன் கோவிலடி
ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்
A/L 2015, 2016 ஆரம்பமாகியுள்ளது
கலைப்பிரிவு

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | சந்திரலிங்கம் | வரலாறு | ஆனந்தன் |
| புவியியல் | குமரன் | நாட.அரங்கியல் | ரமேஸ் |
| இந்துநாகரிகம் | சுரேஸ் | ஊடகம் | மனோ |
| அளவையியல் | நீதன் | மனைப் பொருளியல் | மஜீவன் |
| அரசியல் | சுகாஷ் | ICT | சிவா |
| | | ஊடகம் | மனோ |
| | | விவசாயம் | விக்கி |

தொழில்நுட்ப பிரிவும் ஆரம்பமாகின்றது
(சி-7937)

Digital விஷேட கட்டண சலுகைகள்
இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
■ 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிப்பட நாடுங்கள்
■ நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
■ மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
■ அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்



WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்
62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021-753 6330, 0777 151 101
(C-7930)

முதற்தடவையாக உங்கள் திசைகாட்டியின் விசா வெல்லப்படும் என்கின்ற உறுதிப்பாட்டுடன்
செங்கன் விசா-2 வருடம்-4 வருடம்
கல்வித் தகைமை எதுவும் தேவையே இல்லை.
சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, இத்தாலி உட்பட 26 நாடுகளுக்கு படிக்க உழைக்க அரியவாய்ப்பு
திட்டத்தில் இணைந்து 5 தினங்களில் தூதரகங்களில் விண்ணப்பதாரி நேரில் விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம்.
முடிவுநாள்:-பலரது வேண்டுகோளின் நிமித்தம் 15.07.2014
திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 0212219016, 0215689090
(7017)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.